# க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை - 2011

# மதிப்பீட்டு அறிக்கை

# 33 - வரலாறு

Curriculum
Assessment
&
Evaluation
Teaching
Learning
N E T S

ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

# க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை - 2011
# மதிப்பீட்டு அறிக்கை

# 33 - வரலாறு


ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

**முழுப்பதிப்புரிமையுடையது.**

**வரலாறு**

மதிப்பீட்டு அறிக்கை - க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை - 2011

## நிதி அனுசரணை

எதிர்கால அறிவை மையமாகக் கொண்டு பாடசாலைக்
கல்விமுறையை மாற்றியமைக்கும் செயற்றிட்டம்
(TSEP - WB)

அச்சுப்பதிப்பு : அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்
பானலுவ, பாதுக்க.

# அறிமுகம்

இலங்கையின் பொதுப் பரீட்சைகளில் க.பொ.த (சா.தர)ப் பரீட்சைக்கே அதிகளவான பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர். தேசிய மட்டத்தில் நடாத்தப்படும் இப்பரீட்சையின் பெறுபேற்றின் அடிப்படையில் வழங்கப்படும் சான்றிதழானது உயர் கல்விக்குத் தகுதியானவர்களைத் தெரிவுசெய்வதற்கு மட்டுமன்றி நடுத்தரமட்ட வேலைவாய்ப்புக்களைப் பெறுவதற்கும் தேசிய மற்றும் சர்வதேச ரீதியான பல்கலைக்கழகங்களில் சில பாட நெறிகளுக்கான அடிப்படைத் தகைமையாகவும் கொள்ளப்படுகின்றது. இப்பரீட்சையின் நம்பகம், தகுதி, தரம் ஆகியனவே இதற்குக் காரணமாக அமைகின்றது.

இப்பரீட்சையில் உயர் அடைவைப் பெறுவதற்கு மாணவரும் அவர்களது அடைவை உறுதிப்படுத்துவதற்கு ஆசிரியர்களும் பெற்றோர்களும் அயராது உழைக்கின்றனர். இவர்களது எதிர்பார்ப்புக்களை அடைவதற்கு உதவும் முகமாகவே இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இந்த மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரித்துள்ளது. இந்த மதிப்பீட்டு அறிக்கையில் அடங்கியுள்ள தகவல்கள் பரீட்சார்த்திகள், ஆசிரியர்கள், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், பாடத்துக்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர்கள், பெற்றோர்கள் மற்றும் கல்விசார்ந்த ஆராய்ச்சிகளில் ஈடுபடுவோர் ஆகியோருக்கு பயனுடையதாக அமையும். எனவே, இந்த அறிக்கையை அனேகமானோரின் பயன்பாட்டுக்கு ஏற்ற வகையில் நூலகத்தில் பேணுவது சிறந்ததாகும்.

இந்த மதிப்பீட்டு அறிக்கை மூன்று பகுதிகளைக் கொண்டதாகும். பாடக்குறிக்கோள்கள், பாட அடைவு தொடர்பான எண்ணளவிலான தகவல்கள் இந்தப் பாட வினாப்பத்திரத்தின் அடிப்படையில் பரீட்சார்த்திகளின் அடைவு ஆகியன ஒவ்வொரு வினாவுக்குமென தனித்தனியே பகுதி 1 இல் உள்ளடக்கப்பட்டுள்ளது. மதிப்பீடு மற்றும் ஆராய்ச்சித் துறைகளில் பயன்படுத்தப்பட்டுவரும் மரபுரீதியான சோதனைக் கோட்பாடு (Classical testing theory) மற்றும் உருப்படித் துலங்கல் கோட்பாடு (Item response theory) ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு பரீட்சைத் திணைக்களத்தின் ஆய்வு அபிவிருத்திக் கிளையினால் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளமையால் இதில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்கள் உச்ச நம்பகத்தன்மை, தகுதி ஆகியவற்றைக் கொண்டதாகும்.

வரலாறு பாடத்தின் I,II ஆகிய வினாப்பத்திரங்களில் எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடையளிக்கப்பட்ட விதம் தொடர்பான அவதானிப்புக்கள், முடிவுகள் மற்றும் பின்னூட்டலுக்கான ஆலோசனைகள் ஆகியன இந்த அறிக்கையின் பகுதி II இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.

வினாப்பத்திரத்தின் ஒவ்வொரு வினாவுக்கும் விடையளிக்கும்போது பரீட்சார்த்திகளினால் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள், கற்றல் - கற்பித்தல் செயன்முறை தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள் ஆகியன இந்த அறிக்கையின் பகுதி III இல் உள்ளடக்கப்பட்டுள்ளன. பல்வேறு தேர்ச்சி, தேர்ச்சி மட்டங்களை அண்மிக்கத் தக்க வகையில் கற்றல் - கற்பித்தல் செயன்முறையை நடைமுறைப்படுத்தும் விதம் பற்றிய வழிகாட்டல் இதன்மூலம் கிடைக்கப்பெறுமென நினைக்கின்றேன்.

இந்த அறிக்கையின் தரத்தை மேம்படுத்தத்தக்க உங்களது ஆலோசனைகள், கருத்துக்கள் ஆகியவற்றை எமக்குத் தெரிவிக்குமாறு வேண்டுகிறோம். இந்த அறிக்கையைத் தயாரிக்க அர்ப்பணிப்புடன் பணியாற்றிய கட்டுப்பாட்டுப் பரீட்சகர்கள் மற்றும் வளவாளர்களாகப் பங்கேற்றவர்களுக்கும் தகவல்களை வழங்கிய பிரதம/ மேலதிக, பிரதம/ உதவிப் பரீட்சகர்களுக்கும் இலங்கைப் பரீட்சைத் திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் பணிக்குழுவினர் ஆகியோருக்கும் எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டபிள்யு. எம். என். ஜே. புஷ்பகுமார
பரீட்சை ஆணையாளர் நாயகம்

2012 ஒக்ரோபர் 20
ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
பெலவத்தை,
பத்தரமுல்ல.

| | | |
|---|---|---|
| வழிகாட்டல் | - | திரு. திரு. டபிள்யு.எம்.என்.ஜே. புஷ்பகுமார<br>பரீட்சை ஆணையாளர் நாயகம் |
| ஒழுங்கமைப்பும் நெறிப்படுத்தலும் | - | திருமதி. கயாத்திரி அபேகுணசேகர<br>பரீட்சை ஆணையாளர்<br>(ஆய்வு அபிவிருத்திக் கிளை) |
| இணைப்பும் தொகுப்பும் | - | திரு. ஜே.ஏ.ஜே.ஆர். ஜயக்கொடி<br>உதவிப் பரீட்சை ஆணையாளர் |
| ஆக்கக் குழு | - | திரு. எஸ்.ஏ.சீ. திசாநாயக்கா<br>ஓய்வு பெற்ற செயற்றிட்ட அலுவலர்<br>தேசிய கல்வி நிறுவகம்<br><br>திரு. எஸ்.எம். தயானந்த<br>ஓய்வுபெற்ற செயற்றிட்ட அலுவலர்<br>தேசிய கல்வி நிறுவகம்<br><br>திரு. ஆர்.ஏ. சந்திரசிறி<br>ஆசிரியர் ஆலோசகர்<br>வலயக் கல்வி அலுவலகம்<br>மினுவங்கொடை<br><br>திரு. ஆர்.எம் சத்தியகுமார்<br>ஆசிரியர் ஆலோசகர்<br>வலயக் கல்வி அலுவலகம்<br>தீவகம்<br><br>திருமதி எஸ்.ஆர். அலவ்வ<br>ஆசிரியர் சேவை<br>மகளிர் கல்லூரி<br>கொழும்பு 07 |
| மொழி பெயர்ப்பு | - | அருட்சகோதரி மேரி டொனேட்டா<br>ஓய்வு பெற்ற அதிபர்<br><br>திருமதி சோதிநாயகி பாலசுந்தரம்<br>பிரதிப் பரீட்சை ஆணையாளர் (ஓய்வுநிலை) |
| கணினிப் பக்க வடிவமைப்பு | | திரு. பொ. அற்புதரூபன்<br>முகாமைத்துவ உதவியாளர்<br><br>செல்வி எஸ். றஹீனா ஹாஷிம்<br>கணினி தரவுப் பதிவாளர் |

# உள்ளடக்கம்


**பகுதி** I **பக்க எண்**

1 **பாடக் குறிக்கோள்களும் பாட அடைவு தொடர்பான தகவல்களும்**

1.1 **பாடக் குறிக்கோள்கள்** 1

1.2 **பாட அடைவு தொடர்பான புள்ளிவிபரத் தகவல்கள்**

1.2.1. பாடத்துக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை 2

1.2.2. பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்ற விதம் 2

1.2.3 மாவட்ட அடிப்படையில் முதன் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்ற விதம் 3

1.2.4 கல்வி வலய அடிப்படையில் முதற் தடவையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்ற விதம் 4

1.2.5 வகுப்பாயிடை அடிப்படையில் புள்ளிகள் பெற்ற விதம் 7

1.3. **பாட அடைவு பற்றிய பகுப்பாய்வு**

1.3.1 வினாப்பத்திரம் I இல் பெறப்பட்டுள்ள அடைவு 8

1.3.2 வினாப்பத்திரம் II வினாக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள விதம் 9

1.3.3 வினாப்பத்திரம் II இல் வினாக்களுக்குப் புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம் 9

1.3.4 வினாப்பத்திரம் II இல் பெறப்பட்ட அடைவு 10

**பகுதி** II

2 **வினாக்களும் அவற்றிற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான தகவல்களும்**

2.1 **வினாப்பத்திரம் I உம் அதற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான தகவல்களும்**

2.1.1 வினாப்பத்திரம் I - இன் கட்டமைப்பு 13

2.1.2 வினாப்பத்திரம் I 14

2.1.3. வினாப்பத்திரம் I - எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும் 19

2.1.4 வினாப்பத்திரம் I இற்கு விடையளிக்கப்பட்டுள்ள விதம் பற்றிய அவதானிப்புகள் - (பாடப்பரப்பிற்கு அமைய) 20

2.1.5 வினாப்பத்திரம் I இல் ஒவ்வொரு வினாக்களுக்கும் உரிய விடைத் தெரிவுக்கான துலங்கலை வழங்குவதில் மாணவர் சதவீதம் 21

2.1.6 வினாத்தாள் I இற்கு விடையளித்தல் தொடர்பான முழுமையான அவதானிப்புக்களும், முடிவுகளும், ஆலோசனைகளும் 22

2.2 **வினாப்பத்திரம் II உம் அதற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான தகவல்களும்**

2.2.1 வினாப்பத்திரம் II - கட்டமைப்பு 24

2.2.2 வினாப்பத்திரம் II - எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடையளித்தல் தொடர்பான அவதானிப்பும், முடிவுகளும், ஆலோசனைகளும் 25

2.2.3 II ஆம் வினாப்பத்திரத்திற்கு அளிக்கப்பட்ட விடைகள் தொடர்பான அவதானிப்புகளும், முடிவுகளும், ஆலோசனைகளும் 48

பகுதி **III**

3 **விடையளிக்கும்போது கவனிக்க வேண்டிய விடயங்களும் ஆலோசனைகளும்**

3.1 **விடையளிக்கும்போது கவனிக்க வேண்டிய விடயங்கள்** 50

3.2 **கற்றல் கற்பித்தல் தொடர்பான கருத்துகளும் ஆலோசனைகளும்** 51

# பகுதி I

## 1 பாடக் குறிக்கோள்களும் பாட அடைவும் தொடர்பான தகவல்கள்

### 1.1 பாடக் குறிக்கோள்கள்

- ★ வரலாற்றின் பரம்பலையும் அதன் முக்கியத்துவத்தையும் விளக்குவார்.
- ★ நிகழ்காலத்தைப் புரிந்து கொள்வதற்காக இறந்த காலம் பற்றி நுணுகி நோக்குவார்.
- ★ தேசிய பிரச்சினைகளின்போது நடுநிலையாகச் செயற்படுவார்.
- ★ முக்கியமான வரலாற்று நாயகர்களை முன்மாதிரியாகக் கொண்டு செயற்படுவார்.
- ★ தேசியத்தின் தனித்துவத்தை அறிந்து கொண்டு அதனை மதித்து நடப்பார்.
- ★ வரலாற்று அனுபவங்களை நிகழ்கால நன்மைக்காக பயனுள்ள வகையில் பயன்படுத்துவார்.
- ★ இலங்கையின் வரலாறு தொடர்பில் பெருமிதத்துடன் செயற்படுவார்.
- ★ ஆய்ந்தறிந்தும் பகுத்தறிந்தும் சிந்திக்கும் ஆற்றலை விருத்தி செய்து கொள்வார்.
- ★ வரலாற்றுத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு இடங்களை அடையாளப்படுத்தும் ஆற்றலை வளர்த்துக் கொள்வார்.

## 1.2 பாட அடைவு தொடர்பான புள்ளிவிபரத் தகவல்கள்

### 1.2.1 பாடத்துக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை

| மொழி | பாடசாலை | தனிப்பட்ட | மொத்தம் |
|---|---|---|---|
| சிங்களம் | 224,605 | 5,398 | 230,003 |
| தமிழ் | 65,484 | 11,223 | 76,707 |
| ஆங்கிலம் | 7,475 | 2,495 | 9,970 |
| மொத்தம் | **297,564** | **19,116** | **316,680** |

அட்டவணை 1

### 1.2.2 பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்ற விதம்

| தரம் | பாடசாலைப் ரீட்சார்த்திகள் | | தனிப்பட்ட ரீட்சார்த்திகள் | | மொத்தம் | சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் | | |
| A | 24,558 | 8.25 | 238 | 1.24 | 24,796 | 7.83 |
| B | 23,865 | 8.03 | 368 | 1.93 | 24,233 | 7.65 |
| C | 55,439 | 18.63 | 1,692 | 8.85 | 57,131 | 18.04 |
| S | 89,098 | 29.94 | 6,624 | 34.65 | 95,722 | 30.23 |
| W | 104,604 | 35.15 | 10,194 | 53.33 | 114,798 | 36.25 |
| மொத்தம் | **297,564** | **100.00** | **19,116** | **100.00** | **316,680** | **100.00** |

அட்டவணை 2

1.2.3 மாவட்ட அடிப்படையில் முதல் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்றுள்ள முறை:

| மாவட்டம் | தோற்றியவர் எண்ணிக்கை | மிகச் சிறந்த சித்தி (A) பெற்றவர் | | விசேட திறமைச் சித்தி (B) பெற்றவர் | | திறமைச் சித்தி (C) பெற்றவர் | | சாதாரண சித்தி (S) பெற்றவர் | | சித்தி (A+B+C+S) பெற்றவர் | | சித்தி யடையாதவர் (W) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 1. கொழும்பு | 29907 | 5195 | 17.37 | 3615 | 12.09 | 6553 | 21.91 | 7436 | 24.86 | 22799 | 76.23 | 7108 | 23.77 |
| 2. கம்பஹா | 25417 | 2582 | 10.16 | 2394 | 9.42 | 5188 | 20.41 | 7279 | 28.64 | 17443 | 68.63 | 7974 | 31.37 |
| 3. களுத்துறை | 14257 | 1606 | 11.26 | 1528 | 10.72 | 3025 | 21.22 | 3904 | 27.38 | 10063 | 70.58 | 4194 | 29.42 |
| 4. கண்டி | 19325 | 1906 | 9.86 | 1716 | 8.88 | 3773 | 19.52 | 5256 | 27.20 | 12651 | 65.46 | 6674 | 34.54 |
| 5. மாத்தளை | 6343 | 465 | 7.33 | 470 | 7.41 | 1186 | 18.70 | 1809 | 28.52 | 3930 | 61.96 | 2413 | 38.04 |
| 6. நுவரெலியா | 9599 | 445 | 4.64 | 595 | 6.20 | 1714 | 17.86 | 3002 | 31.27 | 5756 | 59.96 | 3843 | 40.04 |
| 7. காலி | 15040 | 1652 | 10.98 | 1440 | 9.57 | 3062 | 20.36 | 4092 | 27.21 | 10246 | 68.13 | 4794 | 31.88 |
| 8. மாத்தறை | 11143 | 1406 | 12.62 | 1133 | 10.17 | 2333 | 20.94 | 3024 | 27.14 | 7896 | 70.86 | 3247 | 29.14 |
| 9. அம்பாந்தோட்டை | 8719 | 653 | 7.49 | 753 | 8.64 | 1754 | 20.12 | 2602 | 29.84 | 5762 | 66.09 | 2957 | 33.91 |
| 10. யாழ்ப்பாணம் | 10103 | 704 | 6.97 | 814 | 8.06 | 1824 | 18.05 | 2882 | 28.53 | 6224 | 61.61 | 3879 | 38.39 |
| 11. கிளிநொச்சி | 1974 | 29 | 1.47 | 65 | 3.29 | 217 | 10.99 | 514 | 26.04 | 825 | 41.79 | 1149 | 58.21 |
| 12. மன்னார் | 1569 | 76 | 4.84 | 123 | 7.84 | 344 | 21.92 | 562 | 35.82 | 1105 | 70.43 | 464 | 29.57 |
| 13. வவுனியா | 2842 | 155 | 5.45 | 199 | 7.00 | 577 | 20.30 | 946 | 33.29 | 1877 | 66.05 | 965 | 33.95 |
| 14. முல்லைத்தீவு | 1535 | 35 | 2.28 | 58 | 3.78 | 206 | 13.42 | 462 | 30.10 | 761 | 49.58 | 774 | 50.42 |
| 15. மட்டக்களப்பு | 6639 | 482 | 7.26 | 484 | 7.29 | 1244 | 18.74 | 2019 | 30.41 | 4229 | 63.70 | 2410 | 36.30 |
| 16. அம்பாறை | 8971 | 533 | 5.94 | 663 | 7.39 | 1715 | 19.12 | 3097 | 34.52 | 6008 | 66.97 | 2963 | 33.03 |
| 17. திருகோணமலை | 5244 | 247 | 4.71 | 329 | 6.27 | 874 | 16.67 | 1709 | 32.59 | 3159 | 60.24 | 2085 | 39.76 |
| 18. குருநாகல் | 21452 | 1748 | 8.15 | 1864 | 8.69 | 4436 | 20.68 | 6629 | 30.90 | 14677 | 68.42 | 6775 | 31.58 |
| 19. புத்தளம் | 9235 | 638 | 6.91 | 687 | 7.44 | 1732 | 18.75 | 2786 | 30.17 | 5843 | 63.27 | 3392 | 36.73 |
| 20. அனுராதபுரம் | 11524 | 686 | 5.95 | 831 | 7.21 | 2253 | 19.55 | 3535 | 30.68 | 7305 | 63.39 | 4219 | 36.61 |
| 21. பொலன்னறுவை | 5271 | 302 | 5.73 | 375 | 7.11 | 815 | 15.46 | 1498 | 28.42 | 2990 | 56.73 | 2281 | 43.27 |
| 22. பதுளை | 12047 | 728 | 6.04 | 933 | 7.74 | 2434 | 20.20 | 3563 | 29.58 | 7658 | 63.57 | 4389 | 36.43 |
| 23. மொனராகலை | 6582 | 250 | 3.80 | 361 | 5.48 | 1035 | 15.72 | 1845 | 28.03 | 3491 | 53.04 | 3091 | 46.96 |
| 24. இரத்தினபுரி | 14527 | 1144 | 7.87 | 1202 | 8.27 | 2803 | 19.30 | 4106 | 28.26 | 9255 | 63.71 | 5272 | 36.29 |
| 25. கேகாலை | 10722 | 861 | 8.03 | 1072 | 10.00 | 2361 | 22.02 | 3145 | 29.33 | 7439 | 69.38 | 3283 | 30.62 |
| **மொத்தம்** | **269987** | **24528** | **9.08** | **23704** | **8.78** | **53458** | **19.80** | **77702** | **28.78** | **179392** | **66.44** | **90595** | **33.56** |

**அட்டவணை 3**

## 1.2.4 கல்வி வலய அடிப்படையில் முதன் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்றுள்ள முறை :

| கல்வி வலயம் | தோற்றியவர் எண்ணிக்கை | மிகச் சிறந்த சித்தி (A) பெற்றவர் | | விசேட திறமைச் சித்தி (B) பெற்றவர் | | திறமைச் சித்தி (C) பெற்றவர் | | சாதாரண சித்தி (S) பெற்றவர் | | சித்தி (A+B+C+S) பெற்றவர் | | சித்தி யடையாதவர் (W) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 1. கொழும்பு | 14075 | 3348 | 23.79 | 1866 | 13.26 | 2928 | 20.80 | 2937 | 20.87 | 11079 | 78.71 | 2996 | 21.29 |
| 2. ஹோமாகம | 3460 | 254 | 7.34 | 314 | 9.08 | 717 | 20.72 | 988 | 28.55 | 2273 | 65.69 | 1187 | 34.31 |
| 3. ஸ்ரீ ஜயவர்த்தனபுர | 6821 | 934 | 13.69 | 844 | 12.37 | 1655 | 24.26 | 1927 | 28.25 | 5360 | 78.58 | 1461 | 21.42 |
| 4. பிலியந்தல | 5551 | 659 | 11.87 | 591 | 10.65 | 1253 | 22.57 | 1584 | 28.54 | 4087 | 73.63 | 1464 | 26.37 |
| 5. கம்பஹா | 7409 | 1078 | 14.55 | 788 | 10.64 | 1540 | 20.79 | 1937 | 26.14 | 5343 | 72.11 | 2066 | 27.89 |
| 6 மினுவாங்கொட | 4718 | 335 | 7.10 | 412 | 8.73 | 982 | 20.81 | 1464 | 31.03 | 3193 | 67.68 | 1525 | 32.32 |
| 7. நீர்கொழும்பு | 6784 | 577 | 8.51 | 564 | 8.31 | 1295 | 19.09 | 1991 | 29.35 | 4427 | 65.26 | 2357 | 34.74 |
| 8. களனி | 6506 | 592 | 9.10 | 630 | 9.68 | 1371 | 21.07 | 1887 | 29.00 | 4480 | 68.86 | 2026 | 31.14 |
| 9. களுத்துறை | 6965 | 714 | 10.25 | 711 | 10.21 | 1541 | 22.12 | 1862 | 26.73 | 4828 | 69.32 | 2137 | 30.68 |
| 10. மத்துகம | 2817 | 334 | 11.86 | 318 | 11.29 | 556 | 19.74 | 817 | 29.00 | 2025 | 71.88 | 792 | 28.12 |
| 11. ஹொரணை | 4475 | 558 | 12.47 | 499 | 11.15 | 928 | 20.74 | 1225 | 27.37 | 3210 | 71.73 | 1265 | 28.27 |
| 12. கண்டி | 6906 | 1424 | 20.62 | 910 | 13.18 | 1570 | 22.73 | 1561 | 22.60 | 5465 | 79.13 | 1441 | 20.87 |
| 13. தெனுவர | 2141 | 69 | 3.22 | 124 | 5.79 | 385 | 17.98 | 639 | 29.85 | 1217 | 56.84 | 924 | 43.16 |
| 14. கம்பளை | 3193 | 125 | 3.91 | 182 | 5.70 | 508 | 15.91 | 956 | 29.94 | 1771 | 55.47 | 1422 | 44.53 |
| 15. தெல்தெனியா | 1628 | 48 | 2.95 | 107 | 6.57 | 295 | 18.12 | 435 | 26.72 | 885 | 54.36 | 743 | 45.64 |
| 16. வத்தேகம | 2440 | 126 | 5.16 | 182 | 7.46 | 440 | 18.03 | 696 | 28.52 | 1444 | 59.18 | 996 | 40.82 |
| 17. கட்டுகஸ்தொட்ட | 3017 | 114 | 3.78 | 211 | 6.99 | 575 | 19.06 | 969 | 32.12 | 1869 | 61.95 | 1148 | 38.05 |
| 18. மாத்தளை | 3378 | 377 | 11.16 | 308 | 9.12 | 682 | 20.19 | 926 | 27.41 | 2293 | 67.88 | 1085 | 32.12 |
| 19. கலேவெவ | 1977 | 52 | 2.63 | 107 | 5.41 | 342 | 17.30 | 608 | 30.75 | 1109 | 56.10 | 868 | 43.90 |
| 20. நாஉல | 499 | 21 | 4.21 | 36 | 7.21 | 80 | 16.03 | 158 | 31.66 | 295 | 59.12 | 204 | 40.88 |
| 21. வில்கமுவ | 489 | 15 | 3.07 | 19 | 3.89 | 82 | 16.77 | 117 | 23.93 | 233 | 47.65 | 256 | 52.35 |
| 22. நுவரெலியா | 2605 | 84 | 3.22 | 120 | 4.61 | 422 | 16.20 | 921 | 35.36 | 1547 | 59.39 | 1058 | 40.61 |
| 23. கொத்மலை | 1294 | 65 | 5.02 | 91 | 7.03 | 254 | 19.63 | 421 | 32.53 | 831 | 64.22 | 463 | 35.78 |
| 24. ஹட்டன் | 2822 | 127 | 4.50 | 185 | 6.56 | 564 | 19.99 | 826 | 29.27 | 1702 | 60.31 | 1120 | 39.69 |
| 25. வலப்பனை | 1305 | 58 | 4.44 | 62 | 4.75 | 209 | 16.02 | 409 | 31.34 | 738 | 56.55 | 567 | 43.45 |
| 26. ஹங்குரன்கெத்த | 1573 | 111 | 7.06 | 137 | 8.71 | 265 | 16.85 | 425 | 27.02 | 938 | 59.63 | 635 | 40.37 |
| 27. காலி | 6741 | 1017 | 15.09 | 763 | 11.32 | 1395 | 20.69 | 1704 | 25.28 | 4879 | 72.38 | 1862 | 27.62 |
| 28. எல்பிட்டிய | 3044 | 151 | 4.96 | 200 | 6.57 | 589 | 19.35 | 902 | 29.63 | 1842 | 60.51 | 1202 | 39.49 |
| 29. அம்பலாங்கொடை | 3410 | 348 | 10.21 | 314 | 9.21 | 709 | 20.79 | 929 | 27.24 | 2300 | 67.45 | 1110 | 32.55 |
| 30. உடுகம | 1845 | 136 | 7.37 | 163 | 8.83 | 369 | 20.00 | 557 | 30.19 | 1225 | 66.40 | 620 | 33.60 |
| 31. மாத்தறை | 4850 | 935 | 19.28 | 583 | 12.02 | 1067 | 22.00 | 1201 | 24.76 | 3786 | 78.06 | 1064 | 21.94 |
| 32. அக்குரஸ்ஸ | 1947 | 148 | 7.60 | 182 | 9.35 | 414 | 21.26 | 563 | 28.92 | 1307 | 67.13 | 640 | 32.87 |
| 33. முலடியன-ஹக்மன | 2085 | 192 | 9.21 | 214 | 10.26 | 445 | 21.34 | 596 | 28.59 | 1447 | 69.40 | 638 | 30.60 |
| 34. மொறவக்க-தெனியாய | 2261 | 131 | 5.79 | 154 | 6.81 | 407 | 18.00 | 664 | 29.37 | 1356 | 59.97 | 905 | 40.03 |

| கல்வி வலயம் | தோற்றியவர் எண்ணிக்கை | மிகச் சிறந்த சித்தி (A) பெற்றவர் | | விசேட திறமைச் சித்தி (B) பெற்றவர் | | திறமைச் சித்தி (C) பெற்றவர் | | சாதாரண சித்தி (S) பெற்றவர் | | சித்தி (A+B+C+S) பெற்றவர் | | சித்தி யடையாதவர் (W) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 35. தங்கல்லை | 2470 | 160 | 6.48 | 222 | 8.99 | 515 | 20.85 | 773 | 31.30 | 1670 | 67.61 | 800 | 32.39 |
| 36. அம்பாந்தோட்டை | 3761 | 190 | 5.05 | 249 | 6.62 | 737 | 19.60 | 1139 | 30.28 | 2315 | 61.55 | 1446 | 38.45 |
| 37. வலஸ்முல்லை | 2488 | 303 | 12.18 | 282 | 11.33 | 502 | 20.18 | 690 | 27.73 | 1777 | 71.42 | 711 | 28.58 |
| 38. யாழ்ப்பாணம் | 3669 | 333 | 9.08 | 373 | 10.17 | 708 | 19.30 | 1033 | 28.15 | 2447 | 66.69 | 1222 | 33.31 |
| 39. தீவகம் | 706 | 11 | 1.56 | 29 | 4.11 | 76 | 10.76 | 170 | 24.08 | 286 | 40.51 | 420 | 59.49 |
| 40. தென்மராட்சி | 1088 | 72 | 6.62 | 88 | 8.09 | 189 | 17.37 | 300 | 27.57 | 649 | 59.65 | 439 | 40.35 |
| 41. வலிகாமம் | 2803 | 147 | 5.24 | 175 | 6.24 | 512 | 18.27 | 877 | 31.29 | 1711 | 61.04 | 1092 | 38.96 |
| 42. வடமராட்சி | 1837 | 141 | 7.68 | 149 | 8.11 | 339 | 18.45 | 502 | 27.33 | 1131 | 61.57 | 706 | 38.43 |
| 43. கிளிநொச்சி | 1974 | 29 | 1.47 | 65 | 3.29 | 217 | 10.99 | 514 | 26.04 | 825 | 41.79 | 1149 | 58.21 |
| 44. மன்னார் | 1266 | 72 | 5.69 | 111 | 8.77 | 310 | 24.49 | 452 | 35.70 | 945 | 74.64 | 321 | 25.36 |
| 45. மடு | 303 | 4 | 1.32 | 12 | 3.96 | 34 | 11.22 | 110 | 36.30 | 160 | 52.81 | 143 | 47.19 |
| 46. வவுனியா - தெற்கு | 2234 | 137 | 6.13 | 171 | 7.65 | 475 | 21.26 | 751 | 33.62 | 1534 | 68.67 | 700 | 31.33 |
| 47. வவுனியா - வடக்கு | 608 | 18 | 2.96 | 28 | 4.61 | 102 | 16.78 | 195 | 32.07 | 343 | 56.41 | 265 | 43.59 |
| 48. முல்லைத்தீவு | 1013 | 24 | 2.37 | 44 | 4.34 | 166 | 16.39 | 303 | 29.91 | 537 | 53.01 | 476 | 46.99 |
| 49. துணுக்காய் | 522 | 11 | 2.11 | 14 | 2.68 | 40 | 7.66 | 159 | 30.46 | 224 | 42.91 | 298 | 57.09 |
| 50. மட்டக்களப்பு | 2618 | 199 | 7.60 | 190 | 7.26 | 463 | 17.69 | 752 | 28.72 | 1604 | 61.27 | 1014 | 38.73 |
| 51. கல்குடா | 1183 | 16 | 1.35 | 28 | 2.37 | 126 | 10.65 | 347 | 29.33 | 517 | 43.70 | 666 | 56.30 |
| 52. பட்டிருப்பு | 1618 | 84 | 5.19 | 95 | 5.87 | 308 | 19.04 | 561 | 34.67 | 1048 | 64.77 | 570 | 35.23 |
| 53. மட்டக்களப்பு -மத்தி | 1220 | 183 | 15.00 | 171 | 14.02 | 347 | 28.44 | 359 | 29.43 | 1060 | 86.89 | 160 | 13.11 |
| 54. அம்பாறை | 2275 | 137 | 6.02 | 181 | 7.96 | 446 | 19.60 | 735 | 32.31 | 1499 | 65.89 | 776 | 34.11 |
| 55. கல்முனை | 2189 | 248 | 11.33 | 218 | 9.96 | 508 | 23.21 | 742 | 33.90 | 1716 | 78.39 | 473 | 21.61 |
| 56. சம்மாந்துறை | 1130 | 47 | 4.16 | 67 | 5.93 | 204 | 18.05 | 405 | 35.84 | 723 | 63.98 | 407 | 36.02 |
| 57. மஹாஓய | 594 | 6 | 1.01 | 27 | 4.55 | 81 | 13.64 | 174 | 29.29 | 288 | 48.48 | 306 | 51.52 |
| 58. தெஹியத்தகண்டிய | 1062 | 34 | 3.20 | 53 | 4.99 | 147 | 13.84 | 323 | 30.41 | 557 | 52.45 | 505 | 47.55 |
| 59. அக்கரைப்பற்று | 1721 | 61 | 3.54 | 117 | 6.80 | 329 | 19.12 | 718 | 41.72 | 1225 | 71.18 | 496 | 28.82 |
| 60. திருகோணமலை | 1944 | 166 | 8.54 | 165 | 8.49 | 382 | 19.65 | 577 | 29.68 | 1290 | 66.36 | 654 | 33.64 |
| 61. மூதூர் | 989 | 23 | 2.33 | 53 | 5.36 | 146 | 14.76 | 373 | 37.71 | 595 | 60.16 | 394 | 39.84 |
| 62. கந்தளாய் | 1058 | 21 | 1.98 | 54 | 5.10 | 159 | 15.03 | 310 | 29.30 | 544 | 51.42 | 514 | 48.58 |
| 63. கிண்ணியா | 1253 | 37 | 2.95 | 57 | 4.55 | 187 | 14.92 | 449 | 35.83 | 730 | 58.26 | 523 | 41.74 |
| 64. குருநாகல் | 5147 | 736 | 14.30 | 603 | 11.72 | 1103 | 21.43 | 1437 | 27.92 | 3879 | 75.36 | 1268 | 24.64 |
| 65. குளியாப்பிட்டிய | 3724 | 289 | 7.76 | 298 | 8.00 | 754 | 20.25 | 1131 | 30.37 | 2472 | 66.38 | 1252 | 33.62 |
| 66 நிக்கவெரட்டிய | 2772 | 132 | 4.76 | 179 | 6.46 | 549 | 19.81 | 897 | 32.36 | 1757 | 63.38 | 1015 | 36.62 |
| 67. மாகோ | 3357 | 152 | 4.53 | 233 | 6.94 | 669 | 19.93 | 1179 | 35.12 | 2233 | 66.52 | 1124 | 33.48 |
| 68. கிரியுள்ள | 3732 | 251 | 6.73 | 343 | 9.19 | 848 | 22.72 | 1125 | 30.14 | 2567 | 68.78 | 1165 | 31.22 |
| 69. இப்பாகமுவ | 2720 | 188 | 6.91 | 208 | 7.65 | 513 | 18.86 | 860 | 31.62 | 1769 | 65.04 | 951 | 34.96 |
| 70. புத்தளம் | 4241 | 209 | 4.93 | 274 | 6.46 | 747 | 17.61 | 1346 | 31.74 | 2576 | 60.74 | 1665 | 39.26 |
| 71. சிலாபம் | 4994 | 429 | 8.59 | 413 | 8.27 | 985 | 19.72 | 1440 | 28.83 | 3267 | 65.42 | 1727 | 34.58 |

| மாவட்டம் | தோற்றியவர் எண்ணிக்கை | மிகச் சிறந்த சித்தி (A) பெற்றவர் | | விசேட திறமைச் சித்தி (B) பெற்றவர் | | திறமைச் சித்தி (C) பெற்றவர் | | சாதாரண சித்தி (S) பெற்றவர் | | சித்தி (A+B+C+S) பெற்றவர் | | சித்தி யடையாதவர் (W) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 72. அனுராதபுரம் | 3960 | 418 | 10.56 | 385 | 9.72 | 889 | 22.45 | 1074 | 27.12 | 2766 | 69.85 | 1194 | 30.15 |
| 73. தம்புத்தேகம | 2088 | 54 | 2.59 | 104 | 4.98 | 339 | 16.24 | 669 | 32.04 | 1166 | 55.84 | 922 | 44.16 |
| 74. கெக்கிராவ | 2154 | 132 | 6.13 | 171 | 7.94 | 426 | 19.78 | 672 | 31.20 | 1401 | 65.04 | 753 | 34.96 |
| 75. கலென்பின்துனுவெவ | 1523 | 40 | 2.63 | 89 | 5.84 | 323 | 21.21 | 504 | 33.09 | 956 | 62.77 | 567 | 37.23 |
| 76. கெபித்திகொல்லாவ | 1799 | 42 | 2.33 | 82 | 4.56 | 276 | 15.34 | 616 | 34.24 | 1016 | 56.48 | 783 | 43.52 |
| 77. பொலன்னறுவ | 1656 | 158 | 9.54 | 160 | 9.66 | 286 | 17.27 | 451 | 27.23 | 1055 | 63.71 | 601 | 36.29 |
| 78. ஹிங்குரக்கொடை | 2098 | 120 | 5.72 | 152 | 7.24 | 290 | 13.82 | 576 | 27.45 | 1138 | 54.24 | 960 | 45.76 |
| 79. திம்புலாகல | 1517 | 24 | 1.58 | 63 | 4.15 | 239 | 15.75 | 471 | 31.05 | 797 | 52.54 | 720 | 47.46 |
| 80. பதுளை | 3387 | 212 | 6.26 | 272 | 8.03 | 710 | 20.96 | 1042 | 30.76 | 2236 | 66.02 | 1151 | 33.98 |
| 81. பண்டாரவளை | 3140 | 301 | 9.59 | 290 | 9.24 | 707 | 22.52 | 911 | 29.01 | 2209 | 70.35 | 931 | 29.65 |
| 82. மஹியங்கனை | 1926 | 72 | 3.74 | 122 | 6.33 | 318 | 16.51 | 520 | 27.00 | 1032 | 53.58 | 894 | 46.42 |
| 83. வெலிமடை | 2636 | 113 | 4.29 | 201 | 7.63 | 553 | 20.98 | 802 | 30.42 | 1669 | 63.32 | 967 | 36.68 |
| 84. பசறை | 958 | 30 | 3.13 | 48 | 5.01 | 146 | 15.24 | 288 | 30.06 | 512 | 53.44 | 446 | 46.56 |
| 85. மொனராகலை | 2113 | 86 | 4.07 | 104 | 4.92 | 302 | 14.29 | 606 | 28.68 | 1098 | 51.96 | 1015 | 48.04 |
| 86. வெல்லவாய | 2878 | 127 | 4.41 | 182 | 6.32 | 489 | 16.99 | 786 | 27.31 | 1584 | 55.04 | 1294 | 44.96 |
| 87. பிபிலை | 1591 | 37 | 2.33 | 75 | 4.71 | 244 | 15.34 | 453 | 28.47 | 809 | 50.85 | 782 | 49.15 |
| 88. இரத்தினபுரி | 5798 | 698 | 12.04 | 598 | 10.31 | 1134 | 19.56 | 1512 | 26.08 | 3942 | 67.99 | 1856 | 32.01 |
| 89. பலாங்கொடை | 2636 | 179 | 6.79 | 223 | 8.46 | 553 | 20.98 | 711 | 26.97 | 1666 | 63.20 | 970 | 36.80 |
| 90. நிவித்திகல | 2555 | 88 | 3.44 | 143 | 5.60 | 444 | 17.38 | 813 | 31.82 | 1488 | 58.24 | 1067 | 41.76 |
| 91. எம்பிலிபிடிய | 3538 | 179 | 5.06 | 238 | 6.73 | 672 | 18.99 | 1070 | 30.24 | 2159 | 61.02 | 1379 | 38.98 |
| 92. கேகாலை | 4064 | 438 | 10.78 | 481 | 11.84 | 919 | 22.61 | 1201 | 29.55 | 3039 | 74.78 | 1025 | 25.22 |
| 93. மாவனல்லை | 3461 | 237 | 6.85 | 318 | 9.19 | 743 | 21.47 | 998 | 28.84 | 2296 | 66.34 | 1165 | 33.66 |
| 94. தெஹிஓவிட்ட | 3197 | 186 | 5.82 | 273 | 8.54 | 699 | 21.86 | 946 | 29.59 | 2104 | 65.81 | 1093 | 34.19 |
| மொத்தம் | 269987 | 24528 | 9.08 | 23704 | 8.78 | 53458 | 19.80 | 77702 | 28.78 | 179392 | 66.44 | 90595 | 33.56 |

**அட்டவணை 4**

### 1.2.5 வகுப்பாயிடை அடிப்படையில் புள்ளிகள் பெற்ற விதம்

| வகுப்பாயிடை | மீடிறன் | சதவீத மீடிறன் | திரள் மீடிறன் | சதவீத திரள் மீடிறன் |
|---|---|---|---|---|
| 91 - 100 | 592 | 0.19 | 316680 | 100.00 |
| 81 - 90 | 6506 | 2.05 | 316088 | 99.81 |
| 71 - 80 | 15713 | 4.96 | 309582 | 97.76 |
| 61 - 70 | 23263 | 7.35 | 293869 | 92.80 |
| 51 - 60 | 34626 | 10.93 | 270606 | 85.45 |
| 41 - 50 | 46364 | 14.64 | 235980 | 74.52 |
| 31 - 40 | 67068 | 21.18 | 189616 | 59.88 |
| 21 - 30 | 77411 | 24.45 | 122548 | 38.70 |
| 11 - 20 | 42503 | 13.42 | 45137 | 14.25 |
| 01 - 10 | 2605 | 0.82 | 2634 | 0.83 |
| 00 - 00 | 29 | 0.01 | 29 | 0.01 |

**அட்டவணை 5**

**மேலே தரப்பட்டுள்ள அட்டவணையிலிருந்து தகவல்களைப் பெறும் விதம் கீழே தரப்பட்டுள்ளது.**

உதாரணம் : (31 - 40 இற்கு இடைப்பட்ட வகுப்பாயிடையைக் கருதுவோம்.)
இப்பாடத்தில் 31 - 40 வகுப்பாயிடையில் புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் 67068 பேர் உள்ளனர். இது 21.18% ஆகும். 40 புள்ளிகளுக்குக் குறைவாக எடுத்த மாணவர்கள் 189616 பேர் உள்ளனர். இது 59.88% ஆகும்.

## 1.3 பாட அடைவு பற்றிய பகுப்பாய்வு

### 1.3.1 வினாப்பத்திரம் 1 இல் பெறப்பட்டுள்ள அடைவு




வரைபு 1

இது RD/16/05/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.
இவ்வரைபிலிருந்து தகவல்களைப் பெறும்முறை பின்வரும் உதாரணம் மூலம் விளக்கப்படுகிறது.

உதாரணம் - இங்கு 6 ஆம் இலக்க வினாவுக்கே கூடுதலான எண்ணிக்கையான பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்துள்ளனர். அச்சதவீதம் 84% ஆகும். 21 ஆம் இலக்க வினாவிற்கு மிகக் குறைந்த எண்ணிக்கையான பரீட்சார்த்திகளே சரியாக விடையளித்துள்ளனர். அச்சதவீதம் 23% ஆகும்.

### 1.3.2 வினாப்பத்திரம் II - வினாக்கள் தெரிவு செய்யப்பட்ட விதம்




வரைபு 2 - RD/16/02/OL படிவத்திலிருந்து பெறப்பட்ட தகவல்

மேற்படி வரைபின் மூலம் தகவல் பெறும் விதம் பின்வரும் உதாரணம் மூலம் காட்டப்பட்டுள்ளது.

உதாரணம் - இங்கு 1 ஆம் இலக்க வினா கட்டாய வினாவாக இருந்தபோதும் சிறு தொகையினர் இவ்வினாவைத் தெரிவு செய்யவில்லை. இவ்வினாவுக்கு விடையளித்தோர் 99.5% ஆகும். 9 ஆம் வினாவை 31% தினர் மாத்திரமே தெரிவு செய்துள்ளனர்.

### 1.3.3 வினாப்பத்திரம் II இல் புள்ளிகள் பெற்றுள்ள விதம்




வரைபு 3 - RD/16/02/OL படிவத்திலிருந்து பெறப்பட்ட தகவல்

இவ் வரைபிலிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் முறை பின்வரும் உதாரணம் மூலம் விளக்கப்படுகின்றது.

உதாரணம் -

இங்கு 1 ஆம் இலக்க வினாவுக்காக ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகள் 30 ஆகும். அப்புள்ளிகளுள் 76-100% வகுப்பாயிடையில் அதாவது அதாவது 2% ஆனோர் 23-30 இற்கு இடைப்பட்ட புள்ளிகளைப் பெற்றுள்ளனர். இவ்வாறே அவ்வினாவுக்கான புள்ளிகளில் புள்ளி ஆயிடை 0-25% க்கு இடைப்பட்ட புள்ளிகளைப் பெற்றவர்கள் அதாவது 55% ஆனோர் 0 - 7 இற்கு இடைப்பட்ட புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

### 1.3.4 வினாப்பத்திரம் II இல் பெறப்பட்ட அடைவு




**வரைபு 4.1** இது RD/16/04/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

இவ்வரைபிலிருந்து தகவல்களைப் பெறும்முறை பின்வரும் உதாரணம் மூலம் விளக்கப்படுகிறது.

உதாரணம் - 1 ஆம் இலக்க வினாவின் (ஆ) (iii) 3ஆம் பகுதியின் இலகுத்தன்மை 87% ஆகக் காணப்பட, இவ்வினாவின் (ஆ) (i) C பகுதியின் இலகுத்தன்மை 11% மாத்திரம் ஆகும்.

**க. பொ. த. (சா.தர)ப் பரீட்சை - 2011**

**33 - வரலாறு**

**வினாப்பத்திரம் II இன் வினாக்களுக்குரிய ஒவ்வொரு பகுதிக்குமான இலகுச்சுட்டி**




வரைபு 4.2



க. பொ. த. (சா.தர)ப் பரீட்சை - 2011
33 - வரலாறு
வினாப்பத்திரம் II இன் வினாக்களுக்குரிய ஒவ்வொரு பகுதிக்குமான இலகுச்சுட்டி
இலகுச்சுட்டி
1.0
0.9
0.8
0.7
0.6
0.5
0.4
0.3
0.2
0.1
0.0
A B C P Q R S A B C D (a) (b) (c) A B C A B A B C D
(i) (ii) (iii) (iv) (i) (ii) (iii) (iv) (i) (ii) (iii) (iv) (i) (ii) (iii) (iv)
7 8 9 10
பகுதி III இன் வினாவின் பகுதிகளும் உப பகுதிகளும் - உலக வரலாறு


வரைபு 4.3

## பகுதி II

## 2. வினாக்களும் அவற்றிற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்களும்

### 2.1 வினாப்பத்திரம் I உம் அதற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான விபரங்களும்

#### 2.1.1 வினாப்பத்திரம் I - கட்டமைப்பு

நேரம் : 1 மணித்தியாலம். மொத்தப்புள்ளிகள் 40

✶ நான்கு விடைத் தெரிவுகளைக்கொண்ட 40 பல்தேர்வு வினாக்கள் கொண்டது. ஒவ்வொரு வினாவுக்கும் தரப்பட்ட (1), (2), (3), (4) விடைகளுள் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்தல் வேண்டும்.

✶ எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

✶ முழுப் பாடப்பரப்பையும் உள்ளடக்கி வினாக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

## 2.1.2 வினாப்பத்திரம் I

1. மகாநாம தேரரினால் எழுதப்பட்டதாகக் கருதப்படும் இலங்கையின் அரசியல் வரலாறு பற்றிய விரிவான தகவல்கள் இடம்பெறும் வரலாற்றேடு பின்வருவனவற்றில் யாது ?
   (1) தீபவம்சம் (2) மகாவம்சம் (3) தாதவம்சம் (4) போதிவம்சம்

2. இலங்கை பற்றிய தகவல்களை வழங்கிய வெளிநாட்டு எழுத்தாளர்கள் சிலர் நிரல் I இலும் அவர்களுடைய நாடுகள் நிரல் II இலும் தரப்பட்டுள்ளன. நிரல் I ஐ நிரல் II உடன் பொருத்தமாக்கும்போது சரியான விடை பின்வருவனவற்றில் யாது ?

| நிரல் I | நிரல் II |
|---|---|
| (i) இபன் பதூத்தா | *A* – அரேபியா |
| (ii) பாகியன் | *B* – இந்தியா |
| (iii) கௌடில்யர் | *C* – பர்மா (மியன்மார்) |
| | *D* – சீனா |

   (1) *A, D, B* ஆகியன. (2) *C, D, A* ஆகியன. (3) *A, C, B* ஆகியன. (4) *D, A, B* ஆகியன.

3. அனுராதபுரக் காலத்தில் மடாலய (ஆராமய) நிருவாகம் பற்றிய தகவல்கள் பின்வரும் எதில் இடம்பெறுகின்றன ?
   (1) பதுளைத் தூண் சாசனம் (2) சிதுல்பவ்வச் சாசனம்
   (3) மிகிந்தலைப் பலகைச் சாசனம் (4) கொடவாயத் தூண் சாசனம்

4. கித்சிறிமேவ மன்னனின் சாசனமாகக் கருதப்படும் தோணிக்கல் சாசனத்தில் பண்டைக்கால விவசாயம் பற்றிய தகவல்கள் இடம்பெறுகின்றன. இங்கு பின்வருவனவற்றில் எது 'பிற்ற தடஹுச', 'அகலஹுச', 'மெதெஹுச' எனக் குறிப்பிடப்பட்டிருக்கலாம் ?
   (1) நீர்ப்பாசனம் தொடர்பான மூன்று வகை வரிகள்
   (2) விவசாயத்துடன் தொடர்புபட்ட மூன்று அரசாங்க அலுவலர்கள்
   (3) பயிரிடப்பட்ட தானியங்களிலிருந்து அறவிட்ட மூன்று வகை வரிகள்
   (4) நெற் செய்கையுடன் தொடர்புபட்ட மூன்று பயிரிடல் போகங்கள்

5. அனுராதபுரக் காலத்தில் இந்தியப் புலம்பெயர்வோரும் படையெடுப்போரும் இலங்கையில் தரையிறங்குவதற்குப் பயன்படுத்திய துறைமுகம் பின்வருவனவற்றில் யாது ?
   (1) உருவேல (2) கோகண்ண (3) கொடவாய (4) மகாதித்த

6. நாற்பத்து நான்கு ஆண்டுகளாக நியாயமான நீதியான நிருவாகத்தை மேற்கொண்டவராகக் கருதப்படும் அனுராதபுரத் திராவிட ஆட்சியாளர் பின்வருவோரில் யார் ?
   (1) எல்லாளன் (2) திரிதரன் (3) புளகத்தன் (4) பணயமாறன்

7. முதலாம் விஜயபாகு மன்னனின் சேவையை மதிப்பிடும்போது பின்வரும் எவ்விடயத்திற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் ?
   (1) அழிந்திருந்த நீர்ப்பாசனத்தைப் புனரமைப்புச் செய்தல்
   (2) உறவு முறைகளின் மூலம் அயல் அரசர்களுடன் சுமுகமாகச் செயற்படுதல்
   (3) சோழர் ஆட்சியிலிருந்து இந்நாட்டை விடுவித்து சுதந்திரமான இராச்சியத்தை அமைத்தல்
   (4) சிதைவடைந்த விகாரைகளைப் புனரமைப்புச் செய்தல்

● உருவில் ஒரு குளத்தின் பிரதான அங்கங்கள் *A, B, C, D* ஆகியவற்றினால் காட்டப்பட்டுள்ளன. அதனைப் பரிசீலித்து 8, 9 ஆகிய வினாக்களுக்கு விடை எழுதுக.




8. மேலதிக நீரை வெளியேற்றுவதற்குச் செய்யப்பட்டுள்ள அமைப்பைக் காட்டும் எழுத்து யாது ?
   (1) *A* (2) *B*
   (3) *C* (4) *D*

9. இங்கு *C* யினால் காட்டப்படும் நிர்மாணிப்பின் பிரதான தொழில் யாது ?
   (1) குளத்தில் சேரும் அடையலைக் கட்டுப்படுத்தல்
   (2) குளத்தில் நீரின் அமுக்கத்தைச் சமப்படுத்திப் பிரதான கால்வாய்க்கு நீரை விடுவித்தல்
   (3) குளத்தில் அலைகளின் அடிப்பினால் குளக் கட்டு அரிக்கப் படுதலைத் தடுத்தல்
   (4) வரட்சிக் காலத்தில் வரையறுத்த அளவு நீரை வயலுக்கு விடுவித்தல்

10. நிறுத்துத் தானஞ் செய்தல், நாட்டில் பயணஞ் செய்தல், அதிக எண்ணிக்கையில் சாசனங்களைச் செய்வித்தல் ஆகியவற்றின் மூலம் மக்களிடையே பிரசித்திபெறும் கொள்கையைப் பின்பற்றிய பொலன்னறுவை ஆட்சியாளர் பின்வருவோரில் யார் ?
(1) முதலாம் விஜயபாகு மன்னன்
(2) முதலாம் பராக்கிரமபாகு மன்னன்
(3) சாகசமல்ல மன்னன்
(4) கீர்த்தி ஸ்ரீ நிசங்கமல்ல மன்னன்

11. பின்வரும் நிகழ்ச்சிகளிடையே குருநாகல் இராச்சியக் காலத்தில் இலங்கைக்கு வந்த ஒரு புறநாட்டவர் கேட்க அல்லது காணக் கிடைத்த நிகழ்ச்சிகள் இடம்பெறும் விடை யாது ?
*A* – இரண்டாம் பராக்கிரமபாகு அரசனால் ஜாவா சந்திரபானு தோற்கடிக்கப்படுதல்
*B* – யாழ்ப்பாணத்தின் ஆட்சியாளராகச் சப்புமல் இராசகுமாரர் செயற்படுதல்
*C* – ஐந்தாம் மிகிந்து அரசனைக் கைதியாக இந்தியாவிற்குக் கொண்டு செல்லல்
*D* – பிக்குகளின் ஒழுக்காற்று நெறிகள் பற்றித் தம்பதெனியா கலந்துரையாடலில் ஆராய்தல்
*E* – செங்கோ தளபதி இலங்கைக்குப் படையெடுத்தல்
(1) *A, C, D* ஆகியன
(2) *C, D, E* ஆகியன
(3) *B, C, D* ஆகியன
(4) *A, D, E* ஆகியன

12. இலங்கைக் கட்டடக்கலை, சிற்பக்கலை ஆகியவற்றில் முனைப்பான இந்துச் செல்வாக்குகள் எக்காலங்களில் காணப்பட்டன ?
(1) அனுராதபுர - தம்பதெனியா
(2) பொலன்னறுவை - கம்பளை
(3) யாப்பாஹுவா - குருநாகல்
(4) கண்டி - கோட்டை

13. அனகாரிக தர்மபால, ஆறுமுகநாவலர், சித்திலெப்பை ஆகியோரின் பணிகளின் பொது இயல்பு பின்வருவனவற்றில் யாது ?
(1) தேசிய ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு ஒருமிக்கப் பணியாற்றல்
(2) மதுக்கடைகளைத் தடைசெய்வதற்கான இயக்கத்தை விரிவுபடுத்தச் செயற்படுதல்
(3) பிரித்தானிய ஆட்சியிலிருந்து இலங்கையை விடுவிக்கச் செயற்படுதல்
(4) தமது சமயம், கலாசாரம் என்பன தொடர்பாக மறுமலர்ச்சியை ஏற்படுத்தச் செயற்படுதல்

14. பிரித்தானியர் இலங்கையில் கவனஞ் செலுத்துவதற்குப் பின்வரும் எவ்விடயம் காரணமாக இருந்தது ?
(1) தோட்டப் பயிர்ச்செய்கையை ஆரம்பிப்பதற்கு உகந்த காணிகளைப் பெறுவதன் தேவை
(2) உள்நாட்டு மக்களைக் கிறிஸ்தவ சமயத்திற்கு மாற்றுவதன் அபிலாசை
(3) இந்து சமுத்திரத்தில் கடல் நடவடிக்கைகளை வழிப்படுத்துவதற்குத் திருகோணமலைத் துறைமுகத்தின் முக்கியத்துவத்தை விளங்கிக்கொள்ளல்
(4) இலங்கையின் கறுவா வர்த்தகம் தொடர்பான தனியுரிமையைப் பெறுவதன் தேவை

15. இலங்கை பின்வரும் எந்த ஆணைக்குழுவின் யோசனை மீது குடியேற்ற நாடாக மாற்றப்பட்டது ?
(1) த மியுரன் ஆணைக்குழு
(2) கோல்புறூக் ஆணைக்குழு
(3) டொனமூர் ஆணைக்குழு
(4) சோல்பரி ஆணைக்குழு

16. கி.பி. 1818 இலும் கி.பி. 1848 இலும் இலங்கையில் நடைபெற்ற சுதந்திரப் போராட்டம் தொடர்பான தகவல்கள் கீழே *A, B, C, D, E* ஆகியவற்றின் கீழ்க் காணப்படுகின்றன. அவற்றிடையே கி.பி. 1818 சுதந்திரப் போராட்டத்துடன் தொடர்புபட்ட தகவல்கள் மாத்திரம் இடம்பெறும் விடையைத் தெரிந்தெடுக்க.
*A* – கெப்பெற்றிப்பொல திசாவையின் தலைமை
*B* – ரொறிங்ரன் பிரபுவின் வரிக் கொள்கை
*C* – கொங்காலேகொட பண்டா சிங்கள அரசராக முடிசூடல்
*D* – மொல்லிகொட அதிகாரத்தின் செயலெல்லை
*E* – ஹஜ்ஜி மரிக்கார் வெல்லஸ்ஸே முகாந்திரமாக நியமிக்கப்படுதல்
(1) *B, C, D*
(2) *A, C, E*
(3) *A, D, E*
(4) *C, D, E*

17. பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் இந்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட அரசியலமைப்புக்கான திருத்தங்களில் காணப்பட்ட தற்காலத்தில்கூட விரும்பத்தகாத விளைவுகளை ஏற்படுத்துவதில் வெற்றியீட்டிய இயல்பாகக் கருதத்தக்கது
(1) உத்தியோகப் பற்றுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையிலும் பார்க்க உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்தல்
(2) இனவாரியான உறுப்பினர்களை நியமித்தல்
(3) அரசாங்க அலுவலர்களின் அதிகாரம் மக்கள் பிரதிநிதிகளின் அதிகாரத்தை விஞ்சுதல்
(4) நியமன உறுப்பினர்களை நியமிப்பதற்கு ஆளுநருக்கு அதிகாரம் இருத்தல்

18. சோல்பரி அரசியலமைப்புத் திருத்தங்களுக்கேற்ப இலங்கையில் ஏற்படுத்தப்பட்ட ஒரு மாற்றம் பின்வருவனவற்றில் யாது ?
(1) நிறைவேற்றுக் குழுவை அமைத்தல்
(2) அரசுக் கழகத்தை (State Council) அமைத்தல்
(3) சர்வசன வாக்குரிமையை வழங்கல்
(4) மூதவையைத் (செனேற்) தாபித்தல்

19. பிரித்தானிய ஆட்சிக்காலத்தில் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையை மேம்படுத்தல் போன்று உள்நாட்டு விவசாயத்தின் சீரழிவுக்கும் ஒரே வேளையில் செல்வாக்குச் செலுத்திய காரணம்
   (1) கட்டாயச் சேவை மானிய (இராசகாரிய) முறைமையை இரத்துச் செய்தல்
   (2) தரிசு நிலச் சட்டத்தை அங்கீகரித்தல்
   (3) இந்தியத் தொழிலாளர்களின் உழைப்பைப் பெற்றுக்கொள்ளல்
   (4) குடியியல் (சிவில்) சேவையாளர்கள் தனியார் வியாபாரங்களில் ஈடுபட வாய்ப்பளித்தல்

20. பின்வருவனவற்றில் மேலைத்தேய இனங்களின் செல்வாக்குக் காரணமாக இலங்கைச் சமூகத்துடன் சேர்ந்த இயல்புகள் மாத்திரம் சரியாக இடம்பெறும் விடை யாது ?
   *A* – பைலா - கபிரிஞ்ஞ சங்கீதம்
   *B* – தேசவழமைச் சட்டம்
   *C* – சர்வசன வாக்குரிமை
   *D* – மானிய (இராசகாரிய) முறைமை
   *E* – ஆயுள்வேத மருத்துவ முறைமை
   *F* – புரொட்டஸ்தாந்து சமயம்
   (1) *A, B, C* (2) *B, D, E* (3) *A, C, F* (4) *C, E, F*

21. கலாசாரப் புத்தெழுச்சி போன்று அரசியலமைப்புச் சீர்திருத்த இயக்கத்திற்கும் மிகப் பெரிய பங்களிப்பைச் செய்த அமையம்
   (1) இலங்கைத் தேசிய சங்கம் (2) சைவ பரிபாலன சபை
   (3) அமதியப இயக்கம் (4) மகாபோதி சங்கம்

22. பண்டைய இந்தியாவில் சமூகம் பிரிக்கப்பட்டிருந்த நான்கு சாதிகளுக்குமேற்பக் கல்விப் பணி பின்வரும் எந்தப் பிரிவினரிடம் கையளிக்கப்பட்டிருந்தது ?
   (1) பிராமணர் (2) சத்திரியர் (3) வைசியர் (4) சூத்திரர்

23. நாடுகாண் பயணப் பணிகளில் முதலில் கவனஞ் செலுத்திய ஐரோப்பிய நாடு
   (1) ஸ்பெயின் (2) போர்த்துக்கல் (3) ஒல்லாந்து (4) பிரான்ஸ்

24. *A* – கடற் பயண ஆராய்வுக்குத் தேவையான கப்பல்களை அமைத்தல்
   *B* – கடற் பயண ஆராய்வுக்குத் தேவையான வேறு உதவிகளை வழங்கல்
   *C* – புனித வின்சென்ற் முனைக்கு அண்மையில் வான் பொருள் பரிசோதனை ஆய்கூடத்தை அமைத்தலும் அதனை நடத்த உதவுதலும்
   கடற் பயணங்களில் ஈடுபடுவோருக்கு மேற்குறித்த *A, B, C* ஆகியவற்றினால் காட்டப்படும் சேவைகளை வழங்குவதற்கு முன்னோடியாக அமைந்தவராகக் கருதப்படுபவர்
   (1) கிறிஸ்தோபர் கொலம்பஸ் (2) வஸ்கொட காமா
   (3) பர்தலோமியஸ் டயஸ் (4) கப்பலோட்டி ஹென்றி

25. ஐரோப்பாவிலே இடைக்காலத்தின் இறுதியில் கிறிஸ்தவர்களுக்கும் இஸ்லாமியர்களுக்குமிடையே சிலுவைப் போர் எந்நகரத்தின் உரிமை தொடர்பாக நடைபெற்றது ?
   (1) கொன்சுதாந்திநோப்பல் (2) ஜெருசலம்
   (3) ஜெனீவா (4) பீசா

26. இங்கிலாந்தில் ஆரம்பித்த கைத்தொழில் புரட்சி ஆரம்ப காலத்தில் ஐரோப்பாவின் ஏனைய நாடுகளுக்குப் பரவாமைக்குக் காரணம் யாது ?
   (1) ஐரோப்பாவின் ஏனைய நாடுகளுக்கும் இங்கிலாந்திற்குமிடையே தொடர்புகள் நலிந்த மட்டத்தில் இருத்தல்
   (2) இங்கிலாந்து அதன் சொந்த உற்பத்திப் பொருள்களை வெளி உலகிற்குத் திறந்திருக்காமை
   (3) ஐரோப்பாவின் பல நாடுகள் குடியேற்றங்களை ஏற்படுத்தும் போட்டியில் ஈடுபட்டமையால் கைத்தொழின் மயமாக்கத்தில் கவனஞ் செலுத்தாமை
   (4) ஐரோப்பாவின் பல நாடுகள் பொருளாதாரரீதியில் மூடிய கொள்கையைப் பின்பற்றியமை

27. பணத்தை முதலீடு செய்யும் முதலாளித்துவ வகுப்பு எனவும் உழைப்பை விற்கும் தொழிலாளர் வகுப்பு எனவும் இரு வகுப்புகள் எதன் விளைவாக உருவாகின ?
   (1) கைத்தொழில் புரட்சியின் விளைவாக (2) குடியேற்ற முறைமையின் விளைவாக
   (3) மறுமலர்ச்சியின் விளைவாக (4) மானிய முறைமையின் விளைவாக

28. சீனக் கலாசாரப் புரட்சியின் நோக்கம்
   (1) சீனாவின் இளைஞர்கள் மேற்கத்திய கலாசாரத்தில் நாட்டங்கொள்வதைத் தடுத்தல்
   (2) மா சே - துங்கின் சிந்தனையை மக்களிடம் உறுதிப்படுத்தல்
   (3) சீனச் சமூகத்தில் இருந்த பண்டைய மனப்பான்மைகளையும் பழக்கவழக்கங்களையும் அகற்றல்
   (4) சீனாவின் தொழிலாளர்களின் உரிமைகளை உறுதிப்படுத்தல்

29. * மனித உரிமைகள் பற்றிய பிரகடனத்தை வெளியிடுதல்
   * பிரபுக்களினதும் உயர் வகுப்பின் மதகுருக்களினதும் அதிகாரங்களை நீக்கல்
   * சட்டவாக்கத்திற்கு 750 பேர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைத்து அரசனின் அதிகாரங்களை மட்டுப்படுத்தல்
   * அரசனின் விருப்பத்தின் பேரில் மக்களைச் சிறைச்சாலைக்கு அனுப்புவதைத் தடைசெய்தல்
   மேற்குறித்த எல்லா நிகழ்ச்சிகளும் பின்வரும் எதன் விளைவாகக் கருதப்படலாம் ?
   (1) ரூசியப் புரட்சி (2) வியென்னா மாநாடு
   (3) பிரெஞ்சுப் புரட்சி (4) காபனாரி இயக்கம்

30. * இனவாதத்தை வெளிப்படுத்தல்
   * ஆயுதமேந்திய வன்முறைக்கு அடிப்படையாய் அமைதல்
   * அரசாங்கத்திற்கும் ஆட்சியாளருக்கும் கடவுளின் ஆசீர்வாதத்தை வேண்டல்
   * சர்வதிகார ஆட்சிமுறைமையை அடிப்படை எண்ணக்கருவாகக் கொள்ளல்
   மேற்குறித்த இயல்புகளைக் கொண்ட இரு அரசியல் கொள்கைகளாகப் பின்வரும் எவற்றைக் கருதலாம் ?
   (1) தாராண்மைவாதமும் பொதுவுடைமைவாதமும் (2) பாசிசவாதமும் பொதுவுடைமைவாதமும்
   (3) தாராண்மைவாதமும் நாசிசவாதமும் (4) நாசிசவாதமும் பாசிசவாதமும்

31. தனது இனம் தூய ஆசிரியர்களிடமிருந்து வரும் உலகத்தில் மிக உயர்ந்த மனித இனமென மக்களை நம்பவைக்கச் செயற்பட்ட அரசுத் தலைவர் பின்வருவோரில் யாவர் ?
   (1) இத்தாலியின் பெனிற்றோ முசோலினி (2) ஜெர்மனியின் அடொல்ப் ஹிட்லர்
   (3) ரூசியாவின் விளாடிமீர் லெனின் (4) சீனாவின் மாவோ சே - துங்

32. இரண்டாம் உலகப் போரிலே ஹிட்லர் பின்வரும் எந்நாட்டில் படையெடுத்தபோது அவருக்குப் பெரும் தீர்க்கமான தோல்வி ஏற்பட்டது ?
   (1) ரூசியா (2) போலாந்து (3) இங்கிலாந்து (4) பெல்ஜியம்

33. சோவியத் ரூசியா சமூகவுடைமைவாத முறைமையிலிருந்து விலகிச் சுதந்திரப் பொருளாதாரக் கொள்கையைப் பின்பற்றும் நாடாக மாற ஆரம்பித்தது பின்வரும் எவருடைய ஆட்சிக் காலத்தில் ?
   (1) பிரதமர் நிகித்தா குருச்சேவ் (2) சனாதிபதி போரிஸ் யெல்ற்சின்
   (3) சானாதிபதி மிகாயில் கோர்ப்பர்ச்சோவ் (4) சனாதிபதி விளாடிமீர் புட்டின்

34. சோவியத் நாடு தகர்ந்தமையால் உண்டாகிய பாதகமான விளைவாகக் கருதத்தக்கது பின்வருவனவற்றில் யாது ?
   (1) உலக அதிகாரச் சமநிலை அற்றுப்போதல்
   (2) சமூகவுடைமைவாத முறைமை பரவுவதற்கு இருந்த வாய்ப்பு குறைதல்
   (3) வார்சோ அமையத்தைக் கலைத்தல்
   (4) சமூகவுடைமைவாத நாடுகளுக்கு ரூசிய உதவி கிடையாமை

35. கி.பி. 1948 இன் பல்போர் பிரகடனத்தின் மூலம்
   (1) ஜெர்மனி மேற்கு, கிழக்கு என இரண்டாகப் பிரிய நேரிட்டது.
   (2) இஸ்ரேயல் என்ற புறம்பான இராச்சியம் உருவாக்கப்பட்டது.
   (3) வட அத்திலாந்திக் உடன்படிக்கை அமையம் (NATO) தாபிக்கப்பட்டது.
   (4) கொரியா வடக்கு தெற்கு என இரண்டாகப் பிரிய நேரிட்டது.

● கீழே *A, B, C, D, E* ஆகியவற்றின் கீழே கருத்துச் சோடி வீதம் காணப்படுகின்றன. அச்சோடிகள் ஒவ்வொன்றிலும் தரப்பட்டுள்ள முதல் கருத்துக்கும் இரண்டாம் கருத்துக்குமிடையே உள்ள தொடர்பைப் பரிசீலித்து, **36** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

*A* – 1. மானிடவாதம்
2. பிரெஞ்சுப் புரட்சி

*B* – 1. இத்தாலியை இணைப்பதற்கான இயக்கம்
2. பாப்பாண்டவரின் சமய அதிகாரம்

*C* – 1. கரிபோல்டியின் வழிகாட்டல்
2. ஜெர்மனியை இணைப்பதற்கான இயக்கம்

*D* – 1. சார் ஆட்சி
2. ரூசியப் புரட்சி

*E* – 1. இரண்டாம் உலகப் போர் காரணமாக ஏற்பட்ட அழிவு
2. யப்பான் பொருளாதாரம்

36. முதலாவதன் தகர்வில் இரண்டாவதன் செல்வாக்கைக் காட்டும் சோடி
(1) *A* (2) *B* (3) *C* (4) *D*

37. முதலாவதன் ஆரம்பம் இரண்டாவதன் வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்தும் சோடி
(1) *A* (2) *B* (3) *C* (4) *D*

38. முதலாவதற்கும் இரண்டாவதற்குமிடையே தொடர்புடைமை **காணப்படாத** சோடி
(1) *B* (2) *C* (3) *D* (4) *E*

39. முதலாவதன் வெற்றியில் இரண்டாவது பாதகமாகச் செல்வாக்குச் செலுத்தும் சோடி
(1) *A* (2) *B* (3) *D* (4) *E*

40. இரண்டாவதன் வளர்ச்சிக்கு முதலாவது தடையாக இருந்தாலும் அது குறுகிய காலச் செல்வாக்காகக் கருதப்படத்தக்க சோடி
(1) *B* (2) *C* (3) *D* (4) *E*

### 2.1.3. வினாப்பத்திரம் 1 இற்கான எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

| வினா இல | விடை | வினா இல | விடை |
|---|---|---|---|
| 01 | 2 | 21 | 3 |
| 02 | 1 | 22 | 1 |
| 03 | 3 | 23 | 2 |
| 04 | 4 | 24 | 4 |
| 05 | 4 | 25 | 2 |
| 06 | 1 | 26 | 2 |
| 07 | 3 | 27 | 1 |
| 08 | 1 | 28 | 2 |
| 09 | 3 | 29 | 3 |
| 10 | 4 | 30 | 4 |
| 11 | 1 | 31 | 2 |
| 12 | 2 | 32 | 1 |
| 13 | 4 | 33 | 3 |
| 14 | 3 | 34 | 1 |
| 15 | 1 | 35 | 2 |
| 16 | 3 | 36 | 4 |
| 17 | 2 | 37 | 1 |
| 18 | 4 | 38 | 2 |
| 19 | 2 | 39 | 2 |
| 20 | 3 | 40 | 4 |

**ஒரு விடைக்கு 02 புள்ளி வீதம் மொத்தமாக 80 புள்ளிகள்**

**வினாப்த்திரம் I இற்கான இறுதிப் புள்ளி** $= \frac{80}{2} = 40$

2.1.4. வினாப்பத்திரம் I இற்கு விடையளித்த விதம் பற்றிய அவதானிப்பும் முடிவுகளும். (பாடப்பரப்பு ரீதியாக)




| வினா இலக்கம் | பாடப்பரப்பு | இலகுத்தன்மை கூடிய வினா அதன் இலகுச்சுட்டி | இலகுத்தன்மை குறைந்த வினா அதன் இலகுச்சுட்டி |
|---|---|---|---|
| 1 - 21 | இலங்கை வரலாறு | 6 (84%) | 21 (23%) |
| 22 - 40 | உலக வரலாறு | 22 (63%) | 34 (27%) |




வினாப்பத்திரம் I இன் பாடப்பரப்பினுள் இலங்கை வரலாற்றுக்குரிய இலகுத்தன்மை 52% ஆகும். அவ்வாறே உலக வரலாற்றுக்குரிய இலகுத்தன்மை 41% ஆகும். ஒட்டுமொத்தமாக வினாப்பத்திரம் I இற்குரிய இலகுத்தன்மை 47% ஆகும்.

2.1.5 **வினாப்பத்திரம் I இல் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய விடைத் தெரிவுக்கான துலங்கலை வழங்குவதில் மாணவர் சதவீதம்**

| வினா இலக்கம் | சரியான தெரிவு | ஒவ்வொரு தெரிவும் செய்யப்பட்ட மாணவர் சதவீதம் | | | |
|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 |
| 1 | 2 | 15% | 71% | 8% | 6% |
| 2 | 1 | 41% | 24% | 23% | 12% |
| 3 | 3 | 12% | 23% | 52% | 13% |
| 4 | 4 | 9% | 12% | 16% | 63% |
| 5 | 4 | 8% | 46% | 13% | 33% |
| 6 | 1 | 84% | 3% | 9% | 4% |
| 7 | 3 | 10% | 8% | 65% | 17% |
| 8 | 1 | 62% | 28% | 4% | 6% |
| 9 | 3 | 7% | 12% | 76% | 5% |
| 10 | 4 | 12% | 24% | 5% | 59% |
| 11 | 1 | 35% | 17% | 24% | 24% |
| 12 | 2 | 17% | 59% | 13% | 11% |
| 13 | 4 | 14% | 8% | 10% | 68% |
| 14 | 3 | 8% | 5% | 66% | 21% |
| 15 | 1 | 38% | 30% | 16% | 16% |
| 16 | 3 | 21% | 28% | 42% | 9% |
| 17 | 2 | 30% | 24% | 25% | 21% |
| 18 | 4 | 14% | 20% | 38% | 28% |
| 19 | 2 | 21% | 55% | 14% | 10% |
| 20 | 3 | 15% | 14% | 55% | 16% |
| 21 | 3 | 53% | 9% | 23% | 15% |
| 22 | 1 | 63% | 22% | 11% | 4% |
| 23 | 2 | 33% | 38% | 14% | 15% |
| 24 | 4 | 16% | 13% | 11% | 60% |
| 25 | 2 | 47% | 45% | 6% | 2% |
| 26 | 2 | 13% | 32% | 38% | 17% |
| 27 | 1 | 44% | 12% | 10% | 34% |
| 28 | 2 | 26% | 33% | 16% | 25% |
| 29 | 3 | 17% | 15% | 53% | 15% |
| 30 | 4 | 16% | 16% | 14% | 54% |
| 31 | 2 | 17% | 42% | 12% | 29% |
| 32 | 1 | 43% | 28% | 19% | 10% |
| 33 | 3 | 22% | 22% | 34% | 22% |
| 34 | 1 | 27% | 26% | 22% | 25% |
| 35 | 2 | 19% | 28% | 37% | 16% |
| 36 | 4 | 25% | 21% | 18% | 36% |
| 37 | 1 | 33% | 22% | 31% | 14% |
| 38 | 2 | 21% | 36% | 21% | 22% |
| 39 | 2 | 20% | 35% | 26% | 19% |
| 40 | 4 | 13% | 18% | 16% | 53% |

ஒவ்வொரு வினாவின் கீழும் சரியான விடையைத் தெரிவு செய்த மாணவர் சதவீதம் நிழற்றிக் காட்டப்பட்டுள்ளது.

### 2.1.6 வினாப்பத்திரம் I இற்கு விடையளித்தல் தொடர்பான முழுமையான அவதானிப்பும் முடிவும் ஆலோசனைகளும்

1 ஆம் 6 ஆம் வினாக்கள் தரம் 6-10 வரையிலான வரலாற்றுப் பாடத்திட்டத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் காணக்கூடிய கருப்பொருள் நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டிருந்ததனால் முறையே 71%, 84% வரையிலான உயர் அடைவினைக் காணக்கூடியதாக உள்ளது. தெளிவான உருவுடன் பெயரிடுதல் முன்வைக்கப்பட்டுள்ளமையும் களச் சுற்றுலாவின் போது கண்டுபழக்கமான குளத்தின் பகுதிகள் பற்றி வினாக்கள் உருவாக்கப்பட்டிருப்பதாலும் வினா 9 இற்கு 77% மாணோர் சரியான துலங்கலை வெளிப்படுத்தியிருந்தனர். ஒவ்வொரு வகுப்பிலும் வேறு பாடங்களோடும் கலந்துரையாடுவதற்கு இணைந்துள்ள கருப்பொருள் பற்றிய விடயங்களை நினைவுபடுத்தல் முக்கியமானதாகும். கற்றல்-கற்பித்தலிலும் மதிப்பீட்டுச் செயன்முறைகளிலும் வகுப்பறையில் கற்றல் காட்சிப்படுத்தல் தயாரிக்கும்போதும் வரிப்படங்களைப் பயன்படுத்தலின் முக்கியத்துவம் தெளிவாகிறது.

5 ஆம் வினாவுக்கு 33% த்தினரே சரியாக விடையளித்திருந்தனர். இலங்கை , இந்தியா ஆகியவற்றின் அமைவிடம் துறைமுகங்கள் அமைந்துள்ள திசையமைவு என்பன பற்றிய போதிய விளக்கமின்மையே இதற்கான காரணமாகும். மாணவர்கள் தமக்கு நன்கு தெரிந்த ‘கோகண்ண’ (2வது விடை) என்பதனைத் தெரிவு செய்திருந்தனர். இவ்விடையைத் தெரிவு செய்தோர் 46% மாகும். நாடுகளின் புவியியல் அமைவிடம், சம்பவத்துடன் தொடர்புடைய வரலாற்றுத் தகவல்களை உறுதி செய்யும் விதத்தில் கற்றல் கற்பித்தல் மதிப்பீட்டு முறையியலை ஒழுங்கு செய்தல் பொருத்தமானதாகும்.

17ஆம் 18ஆம் வினாக்களுக்கும் மாணவர் துலங்கல்களின் அடைவு மட்டம் 24%, 28% மாக குறைந்த பெறுமானத்தைக் காணக்கூடியதாயுள்ளது. பிரித்தானியரது நிருவாகம், அரசியலமைப்பு விரிவாக்கம் போன்றவற்றை பகுப்பாய்வு செய்யும் பகுப்பாய்வு ஆற்றலை அளவிடுவதற்காகவே தயாரிக்கப்பட்டுள்ளது. ஆறு அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் பற்றிய அறிவு, விளக்கம் பகுப்பாய்வு ஆற்றல் ஆகியன பரீட்சார்த்திகளிடம் காணப்பட வேண்டியதே இதில் செல்வாக்குச் செலுத்தியுள்ளது. இவை போன்ற பாட விடயங்களை உறுதிப்படுத்துவதற்கு வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் மதிப்பீட்டுச் செயன்முறைகளில் ஆசிரியர் மாணவர் பங்குபற்றுதலுடன் அட்டவணைகள், காட்சிப்படுத்தல் பலகைகள், வரைபடங்கள் ஆகியவற்றின் உதவியுடன் செயற்பாடுகள் மூலம் பாடஅலகுகளை விருத்தியாக்கிக் கொள்ளல் நன்று.

21 ஆவது வினாவுக்குப் பரீட்சார்த்திகளில் 53% ஆனோர் 1 ஆவது விடையைத் தெரிவு செய்துள்ளதால் சரியான விடையளித்துள்ளோர் 23% மாகும். கலாசாரம், அரசியலமைப்புச் சீர்திருத்தம் என்ற இரண்டு விடயங்களில் கலாசாரம் என்பதில் கவனம் செலுத்தாமையால் அதிகமானோர் சரியான விடையான 3வது விடையைத் தெரிவு செய்யத் தவறியுள்ளனர். வினாவின் முழுமையை விளங்கிக் கொள்ளல் போல உள்ளடங்கியுள்ள விடயங்களையும் கவனத்திற் கொள்வதற்கு மாணவர்களை ஈடுபடுத்தல் பொருத்தமானதாகும்.

22, 24, 29, 30 ஆகிய வினாக்களுக்கு சரியான விடையளிப்பதில் பாடஅறிவு பெருமளவில் தாக்கம் செலுத்தியுள்ளது. கொடுக்கப்பட்டுள்ள சம்பவங்கள், அவற்றைச் சரியாக இணைத்தல் தொடர்பான திறமை மாணவர்களுக்கு இருக்கின்றது என்பதனை இது காட்டுகிறது. பாடநூல், மேலதிகக் கற்றல் கருவிகளுடன் ஒவ்வொரு நிகழ்வினையும் விடயத்தையும் சரியாக இணைப்பதற்கு வகுப்பறைச் செயற்பபாடுகளைப் பயன்படுத்துதல் பொருத்தமானதாகும்.

23 ஆம் வினாவிற்கு 32% ஆனோர் பிழையான விடையான 1 ஆவது விடையைத் தெரிவு செய்திருந்தனர். சரியான விடையான 2 ஆவது விடையை 38% ஆனோரே தெரிவு செய்திருந்தனர். இதற்கு நாடுகாண் பயண நடவடிக்கைகளில் முன்னோடிகளாக விளங்கிய நாடுகளைப் பிரித்து இனம் காணுவதில் இடர்ப்பட்டதே காரணமாகும். பண்டைய நாளில் நாடுகாண் செயற்பாடுகளில் ஈடுபட்ட நாடுகளிடையே முன்னோடி நாடுகளைப் பிரித்து இனங்காணுவதிலுள்ள சிரமங்களை நீக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் பொருத்தமானதாகும்.

28 வது வினாவுக்கு 1 ஆவது விடையையும் 4 ஆவது விடையையும் 26% ஆனோர் தெரிவு செய்துள்ளனர். இவ்விரு பிழையான விடைகளையும் தெரிவு செய்ததால் 33% ஆனோரே சரியான விடையை அளித்திருந்தனர். பாட அறிவும் நூல்களைப் பயன்படுத்தும் அறிவும் என்பவற்றுக்குப் புறம்பாக வினாக்களில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்களின் கருத்தை விளங்கி விடையை எழுதுவதற்கு முயற்சி எடுக்காமையே இதற்கான காரணமாகும். யாதேனும் ஒரு துறையில் எல்ல விடயங்களையும் தொகுத்துத் தரப்பட்டுள்ள விடைகளிலே மிகச் சரியாகப் பொருந்தும் விடையைத் தெரிவு செய்ய மாணவர்களுக்கு வழிகாட்டுதல் அவசியமாகும். சீனாவுக்கான வராற்று விடயங்கள் பற்றி கூடிய கவனம் செலுத்துதல் அவசியமாகும்.

பாட விடயங்களை சரியாக விளங்கிக் கொள்ளாமையும் ஞாபக சக்தியின்மையாலுமே 34, 35ஆம் வினாக்களுக்குச் சரியாக விடையளித்தோர் முறையே 27%, 28% வரையில் வீழ்ச்சியடைந்துள்ளது. பாடநூலை நன்கு பயன்படுத்தல் சம்பவங்கள், பெறுபேறுகள் என்பவற்றை ஒப்பிடுதல் போன்றவற்றில் மாணவர்களை ஈடுபடுத்துதல் பயனுள்ளதாகும்.

36, 37, 38, 39ஆம் வினாக்களுக்கான சரியான விடையைத் தெரிவு செய்வதில் பல பரீட்சார்த்திகள் தவறியுள்ளனர். 36-40 விரையிலான வினாத்தொகுதிகள் மாணவர்களின் திறமையை அளவிடும் பொருட்டு வழங்கப்பட்ட சவாலான வினாக்களாகும். 40 ஆவது வினாவின் பொருட்டு சாதகமான விடையைப் பெறுவதற்கு யப்பானுடன் தொடர்புடைய முக்கிய நிகழ்வுடன் கொடுக்கப்பட்ட துணைக் கூற்றும் பரீட்சார்த்திகளுக்கு உதவி வழங்கியுள்ளது. இரு நிகழ்வுகள் அல்லது பல நிகழ்வுகள் வேறுபடுதல் மற்றுமொரு பெறுபேறு மீது எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றது என்பதனைத் தர்க்க ரீதியாக ஆராய்வதற்கு மாணவர்களை ஈடுபடுத்தலும், அவ்வாறான வினாக் கோலங்கள் மீது கவனம் செலுத்துவதற்கு அவர்களை வழிநடத்தலும் பொருத்தமானதாகும்.

உலக வரலாறு தொடர்பாக மாணவர்களிடையே உள்ள அறிவு குறைவாக இருப்பதால் இலங்கை வரலாற்றுப் பகுதிகளில் பெற்ற அடைவு மட்டத்தை விட உலக வரலாற்றுப் பகுதிகளில் பெற்ற அடைவு மட்டம் குறைவாகக் காணப்படுகிறது. பாடத்திட்டத்தை உள்ளடக்கும் விதத்தில் சுருக்கம் தயாரித்தல், மீண்டும் மீண்டும் நினைவூட்டல், முக்கிய விடயங்களைச் சாராம்சமாக்குதல் என்பவற்றில் ஈடுபட மாணவர்களுக்கு ஊக்கமளிப்பதன் மூலம் அடைவு மட்டத்தை அதிகரிக்க முடியும்.

## 2.2 வினாப்பத்திரம் II இற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்கள்

### 2.2.1 வினாப்பத்திரம் II - கட்டமைப்பு

நேரம் 03 மணித்தியாலங்கள். மொத்தப் புள்ளிகள் 120

இது I, II, III என மூன்று பகுதிகள் கொண்டது.

**பகுதி I** முதலாம் வினா "அ" பகுதி, "ஆ" பகுதி என இரு பகுதிகளைக் கொண்டது. இவ்வினா கட்டாய வினாவாகும்.

பகுதி (அ) படத்தில் குறித்துக் காட்டுதலுக்கான புள்ளிகள் 18 ஆகும்.

பகுதி (ஆ) படம் தொடர்பான குறுவினாவிற்கு விடையளிப்பதற்கான புள்ளிகள் 12 ஆகும்.

**பகுதி II** இலங்கை வரலாற்றுடன் தொடர்பான கட்டமைப்பு வகை, அமைப்புக் கட்டுரை வகையான ஐந்து வினாக்களில் மூன்று வினாக்களுக்கு விடை எழுதுதல் வேண்டும். வினா ஒன்றிற்குப் 18 புள்ளிகள் வீதம் மொத்தம் 54 புள்ளிகள்

**பகுதி III** இந்தியா, ஐரோப்பா, உட்பட தூர கிழக்கு ஆசிய நாடுகளின் வரலாறு தொடர்பான கட்டமைப்பு, அமைப்புக் கட்டுரை வகையான நான்கு வினாக்களில் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒரு வினாவுக்குப் 18 புள்ளிகள் வீதம் மொத்தம் 36 புள்ளிகள்

வினாப்பத்திரம் II இற்கான மொத்தப் புள்ளிகள் = 30+54+36 = 120 புள்ளிகள்

வினாப்பத்திரம் II இற்கான இறுதிப் புள்ளி = 120 ÷ 2 = 60 புள்ளிகள்

## 2.2.2 வினாப்பத்திரம் II - எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும், முடிவுகளும், ஆலோசனைகளும்

★ வினாப்பத்திரம் II இற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்பு வரைபு **2, 3, 4.1, 4.2, 4.3** என்ற முறையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. வினாவுக்குப் பொருத்தமான வரைபு உரிய வினாக்களின் அவதானிப்பு, முடிவுகள் என்பனவற்றுடன் கொடுக்கப்பட்டுள்ளது.

**வினா இலக்கம் 1**

*பகுதி* I

**1.** (அ) பகுதி (i) இன் கீழ்த் தரப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களையும் வழங்கப்பட்டுள்ள இலங்கைப் படத்திலும் (ii) இன் கீழ்த் தரப்பட்டுள்ள **எல்லா** வரலாற்று இடங்களையும் வழங்கப்பட்டுள்ள உலகப் படத்திலும் குறித்துப் பெயரிடுக.

(i) நாச்சாதுவ வாவி, யான் ஓயா, திரியாய், மட்டக்களப்பு நகரம், மாகம, சேத்திரியகிரி, கசாதொட்ட, செங்கடகல, கதுரகொட விகாரை (கந்தரோடை), மாத்தறை (10 புள்ளிகள்)

(ii) கோழிக்கோடு, மெக்கா, மலாக்கா நீரிணை, வத்திகான், பேஜிங், டில்லி, கம்போடியா, கோர் (கூர்) (08 புள்ளிகள்)

(ஆ) (i) கீழே A, B, C, D ஆகியவற்றின் கீழத் தரப்பட்டுள்ள வரலாற்றுத் தகவல்களுடன் தொடர்புபட்டவர்களை முறையே உமது விடைத்தாளில் எழுதுக.

*A.* மகா வம்சத்தில் குறிக்கப்படுகின்றவாறு விஜய அரசகுமாரனுக்கு இலங்கை இராச்சியத்தைப்பெற உதவிய யட்சர் குல அரகுமாரி

*B.* மூன்று நிக்காயாக்களுக்குமிடையே ஒற்றுமையை ஏற்படுத்திப் பௌத்த சமயத்தின் மேம்பாட்டிற்கு அனுசரணை அளித்த பொலன்னறுவை ஆட்சியாளர்

*C.* இந்தியாவின் இறுதிப் பிரித்தானிய பதிலரையர் (வைசிரோய்)

*D.* இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் நட்பாளர்களின் தரப்புக்குத் தலைமை தாங்கிய பிரித்தானிய பிரதம மந்திரி (04 புள்ளிகள்)

(ii) இங்கு A, B ஆகியவற்றில் காட்டப்பட்டுள்ள படங்களைப் பரிசீலித்துக் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு உரிய விடையை இலக்கங்களின் ஒழுங்குமுறையில் உமது விடைத்தாளில் எழுதுக.

1. கண்டியை ஆண்ட இவ்வரசனின் பெயர் யாது ?
2. அவன் பிறப்பில் எந்த அரச வமிசத்தைச் சேர்ந்தவன் ?
3. அவனுடைய கட்டளையின் பேரில் மரண தண்டனைக்கு ஆளாகிய மகா அதிகாரம் யார் ?
4. இந்த ஆட்சியாளரினால் தலதா மாளிகைக் கட்டடத் தொகுதியுடன் சேர்க்கப்பட்ட கலைத்துவ நிர்மாணிப்பு யாது ?

(04 புள்ளிகள்)



A

(iii)

1. இத்தகைய நிர்மாணிப்புகள் எந்த இந்தியப் பேரரசரினால் கட்டுவிக்கப்பட்டன ?
2. அவர் எந்த அரச வமிசத்தைச் சேர்ந்தவர் ?
3. இங்கு காட்டப்படும் விலங்கின் பெயரை எழுதுக.
4. இத்தகைய நிர்மாணிப்புகள் காணப்படும் இடத்திற்கு ஓர் உதாரணம் தருக.

(04 புள்ளிகள்)



B

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**

**வினா 1**

(1) (அ) (i)




(10 புள்ளிகள்)

1. (அ) (ii)




(08 புள்ளிகள்)

(ஆ) (i)

*A* - குவேனி / குவேண்ணா

*B* - 1 ஆம் பராக்கிரமபாகு / மகா பராக்கிரமபாகு

*C* - மவுண்ட் பேட்டன் பிரபு

*D* - சேர். வின்ஸ்டன் சேர்ச்சில் / சேர்ச்சில் **(01 x 04 = 04 புள்ளிகள்)**

(ii)

1. ஸ்ரீ விக்கிரமராஜசிங்கன்
2. நாயக்க அரச வம்சம் / நாயக்கர் / வடுகர்
3. பிலிமத்தலாவை மகா அதிகாரம் / பிலிமத்தலாவை
4. பத்திரிப்பு / பத்திருப்பு **(01 x 04 = 04 புள்ளிகள்)**

(iii)

1. அசோகச் சக்கரவர்த்தி / தர்ம அசோகன் / அசோகன்
2. மௌரிய வம்சம் / மௌரிய
3. சிங்கம் / மாடு / யானை / குதிரை
4. சாராநாத் / லும்பினி / லௌரிய நந்தகர் / அலகாபாத் / சாஞ்சி **(01 x 04 = 04 புள்ளிகள்)**

**1 ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்ட விதம் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்**




முதலாம் வினா கட்டாய வினாவாக அமைந்தாலும் 99.5% ஆனவர்களே இதற்கு விடையளித்துள்ளனர். இவ்வினாவிற்கான மொத்தப் புள்ளிகள் 30 ஆகும்.
0 - 7 புள்ளி ஆயிடையில் 55%
8 - 15 புள்ளி ஆயிடையில் 35%
16 - 22 புள்ளி ஆயிடையில் 8%
23 - 30 புள்ளிகளைப் ஆயிடையில் 2%
ஆனவர்கள் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவில் 23 அல்லது அதை விட அதிகமான புள்ளிகளைப் பெற்றவர்கள் 2% ஆனவர்கள் ஆவர். 55% ஆனவர்கள் 7 அல்லது அதை விடக் குறைவான புள்ளிகளையே பெற்றுள்ளனர்.



1 ஆம் வினாவின் உபபிரிவுகளும்

இவ்வினா 14 உப பகுதிகளைக் கொண்டது. அவற்றுள் 5 உபபகுதிகளின் இலகுத்தன்மை 60% இலும் மேற்பட்டது. பகுதி (ஆ)(iii) 3 வினாவானது 87% இலகுத்தன்மையும் உப பகுதி (ஆ)(i) c வினாவானது 11% இலகுத்தன்மையைக் கொண்டுள்ளது.

(அ) (i), (ii) ஆகிய உப பகுதிகளில் முறையே இலங்கைப்படத்திலும், உலகப் படத்தின் ஒரு பகுதியிலும் தரப்பட்டுள்ள வரலாற்று இடங்களைச் சரியாகக் குறிப்பது எதிர்பார்க்கப்பட்டது. இவற்றின் இலகுத்தன்மை முறையே 19%,12% ஆகும். தரப்பட்டுள்ள இடங்களைச் சரியாக இனம்கண்டு கொள்ளல், பெயரிடல் என்பன குறைந்த மட்டத்தில் உள்ளன.

(ஆ) (i) இங்கு தரப்பட்டுள்ள வரலாற்றுத் தகவல்களுடன் தொடர்புடைய தனிநபர்களின் பெயர்களைக் குறிப்பிடும் திறமை போதுமானதன்று. ஆ (ii) (iii) உப பகுதிகளில் வழங்கப்பட்டுள்ள உருக்களுடன் இணைந்துள்ள வரலாற்றுத் தகவல்கள் மீது இலங்கையிலும் உலகத்திலும் பிரபல்யமான தனிநபர்கள் கலை ஆக்கங்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட வினாக்கள் அமைந்துள்ளன. இலங்கை தொடர்பான (ii) உபபகுதியின் இலகு தன்மை குறைந்த பெறுமதி கொண்டுள்ளது. விசேட நிகழ்வுகள் பற்றிய அறிவும் நினைவு சக்தியும் குறைவு என்பதையே இது தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

வரலாற்று முக்கியத்துவம் பெற்ற இடங்களைப் புறவுருவப்படத்தில் குறித்துப் பெயரிடும் ஆற்றலை விருத்தி செய்தல் அவசியமாகும். இலங்கை வரலாறு, உலக வரலாறு என்பவற்றுடன் தொடர்புடைய வரலாற்றுச் சிறப்புள்ள இடங்களைக் குறித்துப் பெயரிடும் நுட்பத்திறனில் மாணவர்களுக்குப் பயிற்சி வழங்குதல் மிகவும் முக்கியமானதாகும். கற்றல் கற்பித்தல் செயன்முறையில் தேசப்படங்களைப் பயன்படுத்துவதுடன் இறுதியில் அதனுடன் தொடர்புடைய வரலாற்று சிறப்புள்ள இடங்களைக் குறித்துக் காட்டுதலும் பயனளிப்பதாகும். வரலாற்றுச் சிறப்புள்ள இடங்களின் புராதன பெயர், தற்காலப் பெயர் என்பவற்றை அட்டவணைப்படுத்துதல் தேசப்படங்களில் குறித்துக் காட்டுதல், காட்சிப்படுத்துதல் என்பவற்றை நடைமுறைப்படுத்த முடியும். கலாசார பெறுமதிமிக்க கலைப் பாரம்பரியங்கள் மீது அதிக கவனம் செலுத்துதல் ஒளிப்படங்கள், வரலாற்று ஓவியங்கள் தகவல்கள் என்பவற்றை சேகரித்தல், அவை அடங்கிய வரலாற்றுப் பாட அறையொன்றினை பாடசாலையினுள் ஒழுங்குபடுத்துதல் என்பவற்றினூடாக மாணவர்களின் நயப்பு, அறிவு, நினைவு சக்தி என்பவற்றை விருத்தி செய்ய முடியும்.

# பகுதி II

**வினா 2**

**எதிர்பார்ப்பு :** வரலாற்றுக்கு முந்திய காலத்திலிருந்து அநுராதபுரக் காலம் வரையான அரசியல் சமூக நிலைமைகள் பற்றிய அறிவையும் விளக்கத்தையும் பரீட்சித்தல்

**2.** "இலங்கையின் வரலாற்றுக்கு முந்திய காலம் பற்றிய பல தகவல்கள் குகை அகழ்வுகளிலிருந்து அறியப்படுகின்ற அதே வேளை ஆரியப் புலப்பெயர்ச்சி பற்றிய தகவல்கள் வரலாற்றேடுகளிலிருந்து அறியப்படுகின்றன."

(i) வரலாற்றுக்கு முந்திய காலத்தில் வாழ்ந்த மனிதன் பின்பற்றிய இறுதிக்கிரியைப் பழக்க வழக்கங்கள் பற்றிய தகவல்களை வெளிப்படுத்தும் **மூன்று** குகைகளின் பெயர்களை எழுதுக. (03 புள்ளிகள்)

(ii) இலங்கையில் ஆரியக் குடியிருப்புகளின் ஆரம்பத்திலும் பரவுகையிலும் செல்வாக்குச் செலுத்திய **நான்கு** இந்தியப் புலம்பெயர் குழுக்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) பண்டுகாபய அரசனின் காலத்தின் முக்கியத்துவத்தை **இரு** காரணிகளைக் கொண்டு விவரிக்க. (05 புள்ளிகள்)

(iv) பண்டைய இலங்கையில் இருந்த மிகச் சிறிய நிருவாக அலாகக் கருதப்படும் கிராம சபை செயற்பட்ட விதத்தை **மூன்று** விடயங்களைக் கொண்டு விவரிக்க. (06 புள்ளிகள்)

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**

2. (i)
- கித்துல்கல பெலிலென
- பட்டதொம்லென
- பாகியன்கல
- இராவணெல்ல **(01 x 03 = 03 புள்ளிகள்)**

(ii)
- விஜயனும் அவனது தோழர்களும் / விஜயன் குழுவினர்
- மதுராபுரி இளவரசி குழுவினர்
- பண்டுவாஸ்தேவ குழுவினர்
- பக்தகச்சானா குழுவினர்
- பக்தகச்சானாவின் உறவினர் குழு
- சங்கமித்தை குழுவினர் **(01 x 04 = 04 புள்ளிகள்)**

(iii)
- ★ ஒழுங்குபடுத்திய நிர்வாக முறைமையை கட்டியெழுப்பியமை
- ★ ஆரிய குழுக்களை ஒன்றுபடுத்தி தனி ஒரு ஆட்சியின் கீழ் கொண்டு வந்தமை
  - அநுராதபுரத்தை திட்டமிட்டு நகராக்கியமை
  - கிராம எல்லையை வகுத்தமை
  - நகர நிருவாக அலுவலர் (நகர குத்திக) நியமித்தமை

- ★ சமய அடிப்படையிலான வாழ்க்கை முறைமையினை ஏற்படுத்தியமை
  - சித்தராஜ, காலவேல ஆகியோருக்கு கோயில் கட்டியது.
  - பண்டுல பிராமணரை கௌரவித்தது.
  - பிற புராண வழிபாட்டு முறைகளையும் அங்கீகரித்தமை

- ★ அரச உதவியுடன் குளக்கட்டுமானங்களை ஏற்படுத்தல் (அபய வாவி)
- ★ அரசுக்கான அடிப்படையை வகுத்தல்

**காரணம் - 02 புள்ளிகள்**
**விளக்கம் - 03 புள்ளிகள்**
**மொத்தம் - 05 புள்ளிகள்**

(iv) ★ தலைமைத்துவம்

- கிராமிய முதியோருக்கு தலைமைத்துவம் வழங்கல்
- கமிக / பருக / காமினி என்ற பெயர்களில் தலைமை ஏற்றல்.

★ செயற்பாடு

- வரி அறவிடல்
- அரசனின் வகை கூறும் அதிகாரியாக செயற்படல்
- கிராமிய பழக்க வழக்கம், சம்பிராதங்களை முன்னெடுத்தல்
- நீதியை நிலைநாட்டுதல்

★ சனநாயக அடிப்படையிலான நிர்வாகம்

- மக்களுடன் கலந்துரையாடி தீர்மானம் எடுத்தல்

**காரணம் - 03 புள்ளிகள்**
**விளக்கம் - 03 புள்ளிகள்**
**மொத்தம் - 06 புள்ளிகள்**

**2 ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்ட விதம் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்**




69% த்தினர் 2 ஆம் வினாவைத் தெரிவு செய்துள்ளனர். இவ்வினாவிற்கு வழங்கப்பட்ட மொத்தப் புள்ளிகள் 18 ஆகும்.
0 - 4 புள்ளி ஆயிடையில் 33%
5 - 9 புள்ளி ஆயிடையில் 31%
10 - 13 புள்ளி ஆயிடையில் 21%
14 - 18 புள்ளி ஆயிடையில் 15%
ஆனவர்கள் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவில் 14 அல்லது அதை விட அதிகமான புள்ளிகளைப் பெற்றவர்கள் 15% ஆனவர்கள் ஆவர். 33% ஆன மாணவர்கள் 4 அல்லது அதை விடக் குறைவான புள்ளிகளையே பெற்றுள்ளனர்.




இவ்வினா 4 உப பகுதிகளைக் கொண்டது. உப பகுதி (ii) வினாவானது 63% இலகுத்தன்மையையும், உப பகுதி (iii) வினாவானது 42% இலகுத்தன்மையையும் கொண்டுள்ளது.

இலங்கையில் ஆரியர் குடியேற்றங்களை அமைத்தமை, பண்டைய நிருவாகம் என்பன தொடர்பாகக் கேட்கப்பட்ட இவ்வினாவை 69%ஆனோர் தெரிவு செய்துள்ளனர். நடுத்தர இலகுதன்மையைக் காட்டும் இவ்வினாவின் விடைகளின் (i), (ii), (iii),(iv) ஆகிய பகுதிகளின் இலகுதன்மை முறையே 44%, 63%, 42%,46%. இலங்கையின் வரலாற்றுச் செய்திகள், ஆரியர் குடியேற்றங்களை அமைத்தமை போன்ற விடயங்கள் தரம் 6 -10 வரையில் பல சந்தர்ப்பங்களில் கற்க நேரிட்டமையே இதற்கான காரணமாகும்.

வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன், இலங்கையில் ஆரியக் குடியிருப்புக்கள் ஏற்படுத்தப்பட்டமை, பண்டுகாபய மன்னனின் ஆட்சிக் காலம், புராதன இலங்கையின் ஆட்சி முறை போன்றவை தொடர்பாக மாணவர்களிடம் அறிவை வளர்ப்பதற்குக் கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகளில் இயன்றவரை அட்டவணைப் படுத்திக் காட்டுதல் தேசப்படங்களைப் பயன்படுத்துதல் தனியாள் குழுச் செயற்பாடுகள் பாத்திரமேற்று நடித்தல் போன்ற நுட்பமுறைகளைக் கையாளுதல் மூலம் மாணவர்களின் ஆர்வம், அறிவு விளக்கம் என்பவற்றை மேலும் விருத்தி செய்ய முடியும்

**வினா** 3

**எதிர்பார்ப்பு :** நீர்வள நாகரிகத்தின் ஆரம்பம், விரிவு, விருத்தி பற்றி ஒப்பீட்டு ரீதியான விளக்கத்தை ஆராய்தல்

**3.** "இலங்கையின் வரண்ட வலயத்தில் ஆறுகளை அண்டி வதிந்த ஆரியப் புலம்பெயரிகள் பிற்காலத்திலே நீர்ப்பாசனத் துறையில் திறன்மிக்கவர்களாக விளங்கினர்."

(i) *A.* உபதிஸ்ஸகாம

*B.* உருவேலகாம

*C.* திககாம

என்னும் தொடக்க ஆரியக் குடியிருப்புகள் எந்த ஆறுகளை அண்டி அமைந்தனவென முறையே எழுதிக் காட்டுக. (03 புள்ளிகள்)

(ii) தொடக்க ஆரியக் குடியிருப்பாளர்கள் வரண்ட வலயத்திலே ஆறுகளை அண்டிய பிரதேசங்களைக் குடியிருப்பதற்காகத் தெரிந்தெடுப்பதற்கு அடிப்படையாய் அமைந்த **நான்கு** காரணிகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) ஆரியக் குடியிருப்புகளின் பரவுகையுடன் அவர்கள் ஏன் நீர்ப்பாசனச் செயற்றிட்டங்களை ஆரம்பிப்பதில் கவனஞ் செலுத்தினர் என்பதை **இரு** காரணங்களைக் கொண்டு விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) *A.* குள நிர்மாணிப்பு

*B.* கால்வாய் நிர்மாணிப்பு

என்னும் பணிகளில் எமது பண்டைய நீர்ப்பாசன நுட்பர்கள் காட்டிய தொழினுட்பவியல் திறமையை உதாரணங்கள் தந்து விவரிக்க. (06 புள்ளிகள்)

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**

3. (i) *A* - கதம்பநதி / மல்வத்துஓயா / கம்பீரநதி / கனதரா ஓயா

*B* - கோண நதி / கலா ஓயா

*C* - கல்கா நதி / கல்லோயா **(01 x 03 = 03 புள்ளிகள்)**

(ii)
- விவசாயத்திற்கு ஏற்ற மண்வளம்
- சமதரையான நிலம்
- நீர் வசதி
- பொருத்தமான காலநிலை **(01 x 04 = 04 புள்ளிகள்)**

(iii)
- குடித்தேவை அதிகரிப்பிற்கு ஏற்ப உணவுற்பத்தியை அதிகரிக்க வேண்டிய தேவை
- நெற்செய்கைக்கு ஆற்று நீர் போதாமை
- மழைவீழ்ச்சி ஒரு பருவத்திற்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டமை
- மழைவீழ்ச்சி குறுகிய காலத்திற்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டமை
- நீண்டகால வரட்சி

**காரணம் - 02 புள்ளிகள்**
**விளக்கம் - 03 புள்ளிகள்**
**மொத்தம் - 05 புள்ளிகள்**

(iv) *A.* **குளநிர்மாணிப்பு**

- **குளக்கட்டுக்களை அமைத்தல்**
  - இடத்தை தெரிவு செய்தல்
  - தரையுயர் வேறுபாடுகளுக்கேற்ப குளம் அமைக்கப்பட்டது.
  - பல்வேறு தொழிற்பாடுகளுக்கேற்ப உறுப்புக்கள் அமைக்கப்பட்டது. (கலிங்கல், கலிங்கல் தொட்டி, குளக்கட்டு, அலைதாங்கி)
- **குளப்பாதுகாப்பு**
  - கலிங்கல் தொட்டி, இசுவட்டி, நீர்பாதுகாப்பு முறை, அலைதாங்கி

*B.* **கால்வாய் நிர்மாணிப்பு**

- கால்வாயூடாக நீண்ட தூரத்திற்கு நீர் கொண்டு சென்றமை.
  உ-ம் : யோத, மினிப்பே, எலஹர
- கால்வாயூடாக நதிகளுக்கிடையே தொடர்பை ஏற்படுத்தியமை - ஜயகங்கை
- நீரோட்ட வேகத்தைக் கட்டுப்படுத்த பல உபாயங்கள்
- சுரங்க வழி நீர் விநியோக தொழிநுட்பம் பயன்படுத்தியமை.
  (சனமசு, பூங்கா, பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குதல் வேண்டும்.)

**A - 03 புள்ளிகள்**
**B - 03 புள்ளிகள்**
**மொத்தம் - 06 புள்ளிகள்**

**3 ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்ட விதம் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்**




63% த்தினர் 3 ஆம் வினாவைத் தெரிவு செய்துள்ளனர். இவ்வினாவிற்கு வழங்கப்பட்ட மொத்தப் புள்ளிகள் 18 ஆகும்.
0 - 4 புள்ளி ஆயிடையில் 32%
5 - 9 புள்ளி ஆயிடையில் 34%
10 - 13 புள்ளி ஆயிடையில் 21%
14 - 18 புள்ளி ஆயிடையில் 13%
ஆனவர்கள் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவில் 14 அல்லது அதை விட அதிகமான புள்ளிகளைப் பெற்றவர்கள் 13% ஆனவர்கள் ஆவர். 32% ஆன மாணவர்கள் 4 அல்லது அதை விடக் குறைவான புள்ளிகளையே பெற்றுள்ளனர்.




இவ்வினா 5 உப பகுதிகளைக் கொண்டது. இலகுத்தன்மை மிக உயர்வான உப பகுதி (iv) *A* ஆவதோடு அதன் இலகுத்தன்மை 62% ஆகும். இலகுத்தன்மை மிகக் குறைவான உப பகுதி (i) ஆவதோடு அதன் இலகுத்தன்மை 30% ஆகும்.

இலங்கையின் ஆரம்ப ஆரியக் குடியேற்றங்கள் நதிகளை அண்மித்து அமைதல், பழைய நீர்ப்பாசனத் தொழிநுட்பம் போன்றவற்றைக் கொண்ட இந்த வினாவை 63%ஆனோர் தெரிவு செய்துள்ளனர். இதில் (i) பகுதியின் இலகுதன்மை 30% மாகவும் ஏனைய பிரிவுகளின் இலகுதன்மை முறையே 42%, 62% என்ற நிலையில் உள்ளது. பகுதி (i) இல் கிராமங்களின் பெயர்கள், அவை எந்த நதிப் பள்ளத்தாக்குகளுக்கு உரியன என்ற தெளிவான விளக்கம் மாணவரிடம் இல்லாத காரணத்தால் அடைவு மட்டம் குறைவாகக் காணப்படுகிறது. ஏனைய உபபகுதிகளின் இலகுதன்மை உயர்வாக இருப்பதன் காரணம் இவை வகுப்பறையில் எப்போதும் கலந்துரையாடலுக்கும் கணிப்பீட்டுக்கும் உட்படும் பாடவிடயங்கள் என்பதாலாகும். கால்வாய்கள் அமைப்பு பற்றி உதாரணங்கள் காட்டுதல் மிகக் குறைவாக இருப்பதைக் காணலாம்.

கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளின்போது நதிகள், ஆரியக் குடியிருப்புக்கள் என்பவற்றின் வரலாற்றுப் பெயர்கள், தற்காலப் பெயர்கள் என்பவற்றுக்கும் இடையிலான தொடர்புகளை எடுத்துக் காட்டி அவற்றின் அமைவிடம் பற்றிய விளக்கத்தை உறுதியாக்குதல் வேண்டும். பாடத்தை விருத்தி செய்யும்போது இடை நடுவே நதிகள், அவற்றுக்கு அருகில் அமைந்த ஆரியக் குடியிருப்புகளை தேசப்படத்தில் குறிப்பிடச் செய்தல்அவற்றை அட்டவணைப்படுத்திக் காட்டுதல் என்பனவற்றில் கவனத்தைச் செலுத்துதல் பொருத்தமானதாகும். இயன்றவரையில் எவ்வேளையிலும் உதாரணங்களுடன் விளக்கமளித்தல், சிறப்பான விடயங்கள் பற்றி கவனத்தைச் செலுத்துதல் என்பன அவசியமாகும்.

**வினா 4**

**நோக்கம்:** 13 ஆம் நூற்றாண்டிலிருந்து 15ஆம் நூற்றாண்டு வரையான காலத்தில் இலங்கையின் அரசியல், கலாசாரம் தொடர்பான அறிவையும் ஒப்பீட்டு ரீதியிலான விளக்கத்தையும் ஆராய்தல்

**4.** "பொலன்னறுவைக்குப் பின்னர் நிருவாக நிலையங்கள் இடம்பெயர்ந்த காலம் இந்நாட்டு வரலாற்றில் விசேட தனித்தன்மையை ஏற்படுத்திய காலமாகக் கருதப்படலாம்."

(i) இந்த இலங்கைப் படத்தில் பொலன்னறுவை தொடக்கம் கோட்டை வரைக்கும் நிருவாக நிலையங்கள் இடம்பெயர்ந்த விதம் காணப் படுகின்றது. இங்கு $B, C, D$ ஆகியவற்றினால் காட்டப்படும் நிருவாக நிலையங்களை முறையே காட்டுக. (03 புள்ளிகள்)




(ii) கீழே $P, Q, R, S$ ஆகியவற்றின் கீழ்க் காட்டப்பட்டுள்ள தகவல்களுடன் தொடர்புபட்டவர்களை அடைப்புக் குறிகளினுள்ளே இருந்து தெரிந்தெடுத்து முறையே எழுதிக் காட்டுக.

*P.* இராசரட்டைக் காலிங்க மாகனின் ஆட்சிக்காலத்தில் கோவிந்த மலையில் இருந்த பிரதேச ஆட்சியாளர்.

*Q.* பெலிகல தலதா மாளிகையைக் கட்டுவித்த அரசன்

*R.* கி.பி. 1411 இல் செங்கோ என்ற சீனத் தளபதியினால் தனது நாட்டிற்குக் கைதியாகக் கொண்டு செல்லப்பட்ட ரைகம ஆட்சியாளர்

*S.* ஆறாம் பராக்கிரமபாகுவின் ஆட்சிக்காலத்தில் கண்டி ஜோதி சிற்றாணன் ஏற்படுத்திய கலகத்தை அடக்குவதற்கு அனுப்பப்பட்ட நபர்

(நிசங்க அழகக்கோனார், அம்புலுகல அரசகுமாரர், வீர அழகேஸ்வரர், சங்க செனவி, சப்புமல் இராசகுமாரர், மூன்றாம் விஜயபாகு, முதலாம் புவனேகபாகு, புவனேகபாகு ஆதிபாத) (04 புள்ளிகள்)

(iii) நான்காம் பராக்கிரமபாகு மன்னனின் சமய, இலக்கிய சேவையை ஓர் உதாரணம் வீதம் தந்து விவரிக்க. (05 புள்ளிகள்)

(iv) பதின்மூன்றாம் நூற்றாண்டு தொடக்கம் பதினைந்தாம் நூற்றாண்டு வரையுள்ள காலத்திலே இந்நாட்டில்

*A.* கட்டடக்கலை

*B.* சிற்பக்கலை

என்னும் துறைகளில் காணப்பட்ட சிறப்பியல்புகளை ஒன்று வீதம் தந்து விவரிக்க. (06 புள்ளிகள்)

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**

4. (i)
*B* - தம்பதெனியா
*C* - யாப்பகுவ / சுக்க பப்பத
*D* - குருநாகல் / அத்துகல்புர **(01 x 03 = 03 புள்ளிகள்)**

(ii)
*P* - புவனேகபாகு ஆதிபாத
*Q* - மூன்றாம் விஜயபாகு
*R* - வீர அழகேஸ்வரர்
*S* - அம்புலுகல அரசகுமாரர் **(01 x 04 = 04 புள்ளிகள்)**

(iii) **சமய சேவைகள்**

- ★ குருணாகலில் தந்ததாது கோயில் கட்டி தந்ததாதுவை வைத்தமை
- ★ தந்ததாதுவைப் பாதுகாக்கவும் நிர்வாகம் செய்யவும் நடவடிக்கை மேற்கொண்டது.
- ★ பூசைகள் நடாத்தப்பட வேண்டிய முறை பற்றி தலதா சிறத நூல் மூலம் விளக்கியமை.
- ★ கண்டி அஸ்கிரிய பீடம் ஆரம்பிக்கப்பட்டமை (1312 இல்)

**இலக்கியச் சேவை**

- ★ தலதா சிறித நூலை எழுத உதவியது.
- ★ "பன்சிய பனஸ் ஜாதக" என்பதை சிங்களத்தில் மொழிபெயர்க்க உதவியமை
- ★ "சிங்கள போதி வங்ச" "அனாகதவங்ச" ஆகிய நூல்களை எழுதுவித்தான்.

★ பிரிவெனாக்களை அமைக்க உதவினான்.
(வீதாகம, கனானந்த பிரிவேனா, தொட்டகாமுவே விஜயபாகு பிரிவேனா)

**காரணம் - 02 புள்ளிகள்**
**விளக்கம் - 03 புள்ளிகள்**
**மொத்தம் - 05 புள்ளிகள்**

(iv) *A* - **கட்டடக்கலை**

★ தென்னிந்திய கலையம்சங்களை கொண்டமைந்தமை கட்டிடங்கள்
★ பௌத்த விகாரையுடன் - தேவாலயங்களை அமைத்தல்
(லங்காதிலக, அம்பக்க தேவாலயம்)
★ மக்களிடையே பிரசித்தி பெற, கட்டடங்களை அமைத்தல்
★ காலநிலை மாற்றங்களுக்கேற்ப பொருத்தமான (பாதுகாப்பு) விகாரைகளை அமைத்தமை

*B* - **சிற்பக்கலை**

★ கல், யானைத்தந்தம், மரம் போன்ற மூலப்பொருட்கள் பயன்படுத்தியது.
★ மரச் செதுக்கல்கலை வளர்ச்சி பெற்றது. உ-ம் : எம்பக்க தேவாலயம்
★ மக்களின் வாழ்க்கை முறைமை மரச் செதுக்கல் கலையூடாக வெளிப்படுத்தியமை
(உ-ம் : எம்பக்க)

**காரணம் - 02 புள்ளிகள்**
**விளக்கம் - 04 புள்ளிகள்**
**மொத்தம் - 06 புள்ளிகள்**

**4 ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்ட விதம் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்**




வினா இலக்கம் 4 இனை ஏறத்தாழ $53\%$ மானோர் தெரிவு செய்துள்ளனர். இவ்வினாவுக்குரிய புள்ளிகள் 18 ஆகும்.

0 - 4 புள்ளி ஆயிடையில் $57\%$
5 - 9 புள்ளி ஆயிடையில் $25\%$
10 - 13 புள்ளி ஆயிடையில் $11\%$
14 - 18 புள்ளி ஆயிடையில் $7\%$
ஆனவர்கள் புள்ளி பெற்றுள்ளனர்.

இவ்வினாவுக்கு 14 இற்கு மேல் புள்ளிகளைப் பெற்றோர் ஏறத்தாழ $7\%$ மானோராவர். ஏறத்தாழ $57\%$ மானோர் 4 இலும் குறைந்த புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இவ்வினா 8 உப பகுதிகளைக் கொண்டது. இலகுத்தன்மை மிக உயர்வான உப பகுதி (ii) $Q$ ஆவதோடு அதன் இலகுத்தன்மை $69\%$ ஆகும். இலகுத்தன்மை மிகக் குறைவான உப பகுதி (iv) $A$ ஆவதோடு அதன் இலகுத்தன்மை $22\%$ ஆகும்.

பொலன்னறுவையின் பின்னர் தோற்றம் பெற்ற இராசதானிகள் தொடர்பாகக் கேட்கப்பட்ட இவ்வினாவை $53\%$ ஆனோர் தெரிவு செய்திருந்தனர். பகுதி (i), (ii) $Q$ என்பவற்றின் இலகுதன்மை முறையே $42\%, 69\%$ ஆகும். (iii) ஆவது பகுதியின் இலகுதன்மை $22\%$ இலிருந்து $39\%$ வரை பரவியுள்ளது. படத்தில் குறிப்பிடப்பட்டுள்ள புராதன இராசதானிகளைச் சரியாகப் பெயரிடுவதற்குத் தேவையான அமைவிடம் பற்றிய ஞாபகசக்தி குறைவே இதற்கான காரணமாகும். விடைத்தொகுதிகளிலிருந்து சரியான விடையைத் தெரிவு செய்வதற்குத் தேவையான பாட விடயங்கள் பற்றிய அறிவை ஞாபகப்படுத்த முடியாமை காரணமாக உயர்மட்ட அடைவைப்பெற முடியதிருந்தது எனலாம். உதாரணங்கள் காட்டி விளக்குவதற்கும் குறித்த சோடிகளுக்குப் பொருத்தமான விதத்தில் கேட்கப்பட்ட துறைகளின் சிறப்பு அம்சங்களைக் காட்டி அதை விவரிப்பதற்குமான இயலுமைக் குறைபாடே (iii), (iv) $B$ பகுதியின் இலகுதன்மை முறையே $33\%, 23\%$ எனக் காணப்படுவதற்கான காரணங்களாகும்.

களச் சுற்றுலாக்களினூடாக வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களின் தகவல்களை அவதானித்தல் வீடியோ நாடாக்கள், சித்திரங்கள், உருக்கள் என்பவற்றை ஆதாரங்களாகக் காட்டி விடயங்களை உறுதிப்படுத்துதல், பாடநூல்களைக் கற்கும்போது தலைப்புக்கள், உபதலைப்புக்கள் என்பவற்றின் கீழ் பாடவிடயங்களை ஒழுங்கமைத்தலுக்கான பயிற்சியை வழங்குதல் என்பன அவசியமாகும்.

தேசப்படங்களில் இடங்களைக் குறித்துப் பெயரிடுதல் பயிற்சி பெறுதல் அவற்றை வகுப்பறையில் காட்சிப்படுத்துதல் என்பனவும் பொருத்தமானவையாகும்.

இது போன்றே உரிய பாட விடயங்களை நன்கு கற்ற பின்னர் முழுமையாக அவ்விடயத்துக்குரிய விசேட அம்சங்களைச் சுருக்கமாக ஒழுங்குபடுத்துவதில் மாணவர்களை ஈடுபடுத்துதல் அவர்கள் சிறப்பான அடைவு மட்டமத்தைப் பெற வழியமைக்கும்.

**வினா 05**

**எதிர்பார்ப்பு :** 16 ஆம் நூற்றாண்டிலிருந்து 18ஆம் நூற்றாண்டின் இறுதி வரை இலங்கைக்கு வருகை தந்த ஐரோப்பிய நாட்டவர்களுக்கும் அக்காலத்திலிருந்த இலங்கை ஆட்சியாளர்களுக்குமிடையிலான தொடர்புகள் பற்றிய ஒப்பீட்டு ரீதியிலான விளக்கத்தைப் பரிசீலித்தல்.

**5.** "போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் இந்நாட்டின் அரசியலில் மாற்றங்களை ஏற்படுத்துவதில் ஒரு குறித்த அளவிற்குச் செல்வாக்குச் செலுத்தியுள்ளதாகக் கருதப்படுகின்றது."

(i) கி.பி. 1521 இல் ஏற்பட்ட விஜயபாகுக் கொலைக்கு உடனடியாகப் பின்னர்

*A.* கோட்டை

*B.* சீதாவக்க

*C.* றைகம

என்னும் ஒவ்வோர் இராச்சியத்திலும் அதிகாரத்திற்கு வந்த ஒவ்வோர் அரசரின் பெயரை முறையே எழுதிக் காட்டுக. (03 புள்ளிகள்)

(ii) கீழே *A, B, C, D* ஆகியவற்றின் கீழ்க் காட்டப்பட்டுள்ள வரலாற்றுச் சம்பவங்களுடன் தொடர்புபட்டுள்ள வர்களை அடைப்புக்குறிகளினுள்ளே தரப்பட்டுள்ள பட்டியலிலிருந்து தெரிந்தெடுத்து முறையே எழுதுக.

*A.* கி.பி. 1505 இலே காலியில் தரையிறங்கிய போர்த்துக்கேயக் கடலோடி

*B.* முல்லேரியாப் போரில் போர்த்துக்கேயப் படையை வழிநடத்திய தளபதி

*C.* முதலாம் ராஜசிங்க அரசன் முதன்முதலாகக் கண்டியில் படையெடுத்தபோது அங்கு இருந்த ஆட்சியாளர்

*D.* அரசுரிமையை உறுதிப்படுத்துவதற்கு முதலாம் விமலதர்மசூரிய அரசன் திருமணஞ் செய்த அரசகுமாரி

(கரலியத்த பண்டார, வீரசுந்தர பண்டார, குசுமாசனதேவி, கொண்ஸ்டண்டயின் த சா, லோறன்ஸ த அல்மேதா, அபோன்சு பெரேயிரா த லசர்தா, சமுத்திராதேவி, பிறென்சிஸ்கோ த அல்மேதா) (04 புள்ளிகள்)

(iii) பலம்வாய்ந்த இராச்சியமாக இருந்த கோட்டை குறுகிய காலத்தில் போர்த்துக்கேய ஆட்சிக்குக் கீழ்ப்பட்டமையில் செல்வாக்குச் செலுத்திய **இரு** காரணங்களை விவரிக்க. (05 புள்ளிகள்)

(iv) கண்டி அரசர்களுடன் செயற்படும்போது பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ஒல்லாந்தர்கள் உத்திகளைப் பின்பற்றினர் என்பதை **மூன்று** உதாரணங்கள் தந்து விளக்குக. (06 புள்ளிகள்)

## எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்

5. (i)
- *A* - 7ஆம் புவனேகபாகு
- *B* - மாயாதுன்னை
- *C* - மத்தும பண்டார / இறைகம பண்டார **(01 x 03 = 03 புள்ளிகள்)**

(ii)
- *A* - லோறன்ஸ் த அல்மேதா
- *B* - அபோன்சு பெரேயிரா த லசர்தா
- *C* - கரலியத்த பண்டார
- *D* - குசுமான தேவி **(01 x 04 = 04 புள்ளிகள்)**

(iii)
- ★ விஜயபாகு கொலைக்கு (1521) பின் கோட்டை இராச்சியம் 3 ஆக பிளவுபட்டமை.
- ★ உள்நாட்டு ஆட்சியாளர்களிடையே காணப்பட்ட அமைதியின்மை
- ★ தர்மபாலனின் செயற்பாடு
  - கிறிஸ்தவனாக மாறியது
  - கோட்டை இராச்சியத்தை போர்த்துக்கேயருக்கு தானமாக வழங்கியமை
- ★ உள்நாட்டு மன்னர்களின் ஒற்றுமையின்மை
- ★ போர்த்துக்கேயரின் ஆயுதபலம்
- ★ போர்த்துகீசர் உள்நாட்டவரிடம் இருந்து பெற்ற அனுசரணை

**காரணத்துக்கு - 02 புள்ளிகள்**
**விளக்கத்துக்கு - 03 புள்ளிகள்**
**மொத்தப் புள்ளி - 05 புள்ளிகள்**

(iv)
- ★ ஒல்லாந்தர் இயலுமானவரை யுத்தத்தை தவிர்த்தல்
- ★ பல்வேறு செயற்பாடுகளினூடாக உதவியமை
- ★ தங்களுக்கு சாதகமான முறையில் உடன்படிக்கை செய்தல் (1638, 1766)
- ★ மலையக அரசர்களுடன் நல்லுறவைப் பேணியமை

**காரணத்துக்கு - 03 புள்ளிகள்**
**விளக்கத்துக்கு - 03 புள்ளிகள்**
**மொத்தப் புள்ளி - 06 புள்ளிகள்**

**5 ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்ட விதம் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்**




வினா இலக்கம் 5 இனை ஏறத்தாழ 68% மானோர் தெரிவு செய்துள்ளனர். இவ்வினாவுக்குரிய புள்ளிகள் 18 ஆகும்.

0 - 4 புள்ளி ஆயிடையில் 35%
5 - 9 புள்ளி ஆயிடையில் 34%
10 - 13 புள்ளி ஆயிடையில் 18%
14 - 18 புள்ளி ஆயிடையில் 13%

ஆனவர்கள் புள்ளி பெற்றுள்ளனர்.

இவ்வினாவுக்கு 14 இற்கு மேல் புள்ளிகளைப் பெற்றோர் ஏறத்தாழ 13% மானோராவர். ஏறத்தாழ 34% மானோர் 4 இலும் குறைய புள்ளி பெற்றுள்ளனர்.




இவ்வினா 7 உப பகுதிகளைக் கொண்டது. இலகுத்தன்மை மிக உயர்வான உப பகுதி (ii) $D$ ஆவதோடு அதன் இலகுத்தன்மை 86% ஆகும். இலகுத்தன்மை மிகக் குறைவான உப பகுதி (iv) ஆவதோடு அதன் இலகுத்தன்மை 29% ஆகும்.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆகியோரது ஆட்சியின் காரணமாக இந்நாட்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள், இராசதானிகள் என்பன தொடர்பாக இவ்வினா கேட்கப்பட்டுள்ளது. 68% ஆனோர் இவ்வினாவைத் தெரிவு செய்துள்ளனர். பகுதி (i) இன் அடைவு மட்டம் 60% ஆகும். இப்பிரிவு அறிவை அடிப்படையாகக் கொண்டு கேட்கப்பட்ட அரசர்களின் பெயர்களைக் குறிப்பிடுதல் எதிர்பார்க்கப்படுகின்றது. பகுதி (ii) இன் ஒவ்வொரு உப பிரிவினதும் இலகுதன்மை 75%, 42%,60%, 86% மாகும். (iii), (iv) இன் இலகுதன்மை முறையே 46%, 29% மாகும். பாடநூலில் உள்ள விரிவான தகவல்களிடையே முக்கிய விடயங்களைத் தொகுத்துக்கொள்ள இயலாமையும் அவற்றை விளக்குவதற்கான இயலுமைக் குறைபாடுமே பெறக்கூடிய புள்ளிகளில் குறைந்த அளவைப் பெறுவதற்கான காரணங்கள் எனலாம்.

உபபிரிவு (ii) $D$ யில் உள்ள விடயத்தை மாணவர்கள் விரும்புவதால் அதன் அடைவு மட்டம் உயர்வாக உள்ளது. இதற்கேற்ப பல்வேறு தகவல்களைக் கதைவடிவிலாக்கி மாணவர்களைக் கவரும் விதத்தில் வாழ்க்கை வரலாறு, நிகழ்வுகள் என்பவற்றை உருவாக்கும் முறைகளைப் பின்பற்றுதல் அவசியமாகும். பாத்திரமேற்று நடித்தல், மேடை நாடகங்கள் உருவாக்குதல், போன்றவற்றினூடாக மாணவர்களின் இரசனையை விருத்தி செய்யலாம். இலங்கையில் மேலைத்தேயத்தவரின் நிர்வாகம் அவர்களின் செயற்பாடுகள் என்பவற்றை அட்டவணைப்படுத்தல், காட்சிப்படுத்தல், கற்றல் கற்பித்தல் கருவிகளை உருவாக்குதல் போன்றவற்றினூடாக மாணவர்களுக்கு ஊக்கமளிக்கலாம்.

### வினா 06

**நோக்கம்:** பிரித்தானியர் ஆட்சிக்காலத்தின் பிற்பகுதியில் ஏற்பட்ட சமூக, கலாசார, பொருளாதார மாற்றங்களின் இயல்பு அதனாலேற்பட்ட விளைவுகள் பற்றிய அறிவு, விளக்கம் என்பவற்றை ஆராய்தல்.

**6.** *'இந்நாட்டில் பிரித்தானிய ஆட்சிக் காலத்தின் இறுதி அரைவாசியில் தொடங்கிய சமூக, கலாசார, பொருளாதார மாற்றங்கள் சுதந்திரத்திற்குப் பின்னர் மேலும் விருத்தியடைந்தன.'*

(i) *கீழே A, B, C ஆகியவற்றினால் காட்டப்படும் ஒவ்வொரு விடயத்திற்கும் உரிய விடையை அடைப்புக் குறிகளினுள்ளே இருந்து தெரிந்தெடுத்து முறையே எழுதுக.*

*A.* தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளுக்காகச் செயற்படும்போது முதன்முதலாகத் தலைமை தாங்குதல்

*B.* நகரத் தொழிலாளர்களின் உரிமைகளுக்காகச் செயற்படும்போது முதன்முதலாகத் தலைமை தாங்குதல்

*C.* உரிமைகளை வெல்வதற்குத் தொழிலாளர்கள் ஆரம்பித்த முதல் வேலை நிறுத்தம்

(கலாநிதி என். எம். பெரேரா, நடேச ஐயர், கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா, ஏ.ஈ. குணசிங்க, வெள்ளவத்தை நெசவாலை வேலைநிறுத்தம், கொழும்பு அச்சாளர்களின் வேலைநிறுத்தம்) (03 புள்ளிகள்)

(ii) *கீழே A, B, C, D ஆகியவற்றினால் காட்டப்படும் விடயங்கள் ஒவ்வொன்றுடனும் தொடர்புபட்டவரை முறையே எழுதுக.*

*A.* பாணந்துறை விவாதத்தை நடத்துவதன் மூலம் பௌத்த மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்கு முன்னோடியாக அமைந்த பிக்குகள்

*B.* இலங்கைக்கு வந்த பௌத்தசமயத்தைத் தழுவிய இந்நாட்டில் பௌத்த கல்வியின் மேம்பாட்டிற்கு அத்திவாரமிட்ட அமெரிக்கர்

*C.* யாழ்ப்பாணத்தில் இந்துக் கல்லூரியை ஆரம்பித்து இந்துசமய மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்கு முன்னோடியாக இருந்தவர்

*D.* முஸ்லிம் மக்களின் கல்வியின் மேம்பாட்டிற்காக மருதானையில் சாகிராக் கல்லூரியை ஆரம்பித்தவர் (04 புள்ளிகள்)

(iii) *கலாநிதி சீ. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கர அவர்கள் இந்நாட்டுக் கல்வியின் மேம்பாட்டிற்காக ஆற்றிய சேவையை* **இரு** *விடயங்களைக் கொண்டு விவரிக்க.* (05 புள்ளிகள்)

(iv) *அரிசியில் நாடு தன்னிறைவு அடைவதற்குச் சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கை பின்பற்றிய* **மூன்று** *நடவடிக்கைகளை உதாரணங்கள் தந்து விளக்குக.* (06 புள்ளிகள்)

### எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்

6. (i)
*A* - நடேச ஐயர்
*B* - ஏ. ஈ. குணசிங்க
*C* - கொழும்பு அச்சாளர் வேலைநிறுத்தம் **(01 x 03 = 03 புள்ளிகள்)**

(ii)
*A* - மீகெட்டுவத்தை குணானந்ததேரர்
*B* - கேர்ணல் ஹென்றி ஸ்ரீல் ஒல்கொட் / ஒல்கொட்
*C* - ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்
*D* - எம்.சி. சித்திலெப்பை **(01 x 04 = 04 புள்ளிகள்)**

(iii)
- ★ கட்டாய இலவசக் கல்வியை பெற்றுக் கொடுத்தமை
- ★ மத்திய பாடசாலைகளை ஆரம்பித்தமை
- ★ தாய்மொழிக் கல்விப் போதனையை ஏற்படுத்தியமை
- ★ மதிய உணவு வழங்கும் திட்டம் ஆரம்பித்தது.
- ★ ஆசிரியர் பயிற்சிக்காக விசேட நிலையங்களை ஆரம்பித்தமை.

**காரணத்துக்கு - 02 புள்ளிகள்**
**விளக்கத்துக்கு - 03 புள்ளிகள்**
**மொத்தப் புள்ளி - 05 புள்ளிகள்**

(iv)
- ★ நெல்லுக்கான உத்தரவாத விலைத்திட்டம்
- ★ நெல்லாராய்ச்சி நிலையங்களை உருவாக்கல் (பத்தலகொட, மகா இலுப்பல்லம, போம்புவல, ஹிங்குரங்கொட)
- ★ விவசாய கடனுதவித் திட்டம்
- ★ விவசாய சேவை மத்திய நிலையம்

- ★ மகாவலித்திட்டம் / நீர்ப்பாசனத் திட்டம்
- ★ விவசாய காப்புறுதி / ஓய்வூதியம்
- ★ உரமானியத் திட்டம்

**காரணத்துக்கு - 03 புள்ளிகள்**
**விளக்கத்துக்கு - 03 புள்ளிகள்**
**மொத்தப் புள்ளி - 05 புள்ளிகள்**

**6 ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்ட விதம் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்**




வினா இலக்கம் 6 இனை ஏறத்தாழ 45% மானோர் தெரிவு செய்துள்ளனர். இவ்வினாவுக்குரிய புள்ளிகள் 18 ஆகும்.

0 - 4 புள்ளி ஆயிடையில் 42%
5 - 9 புள்ளி ஆயிடையில் 33%
10 - 13 புள்ளி ஆயிடையில் 15%
14 - 18 புள்ளி ஆயிடையில் 10%
ஆனவர்கள் புள்ளி பெற்றுள்ளனர்.

இவ்வினாவுக்கு 14 இற்கு மேல் புள்ளிகளைப் பெற்றோர் ஏறத்தாழ 10% மானோராவர். ஏறத்தாழ 42% மானோர் 4 இலும் குறைந்த புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இவ்வினா 9 உப பகுதிகளைக் கொண்டது. இலகுத்தன்மை மிக உயர்வான உப பகுதி (ii) *B* ஆவதோடு அதன் இலகுத்தன்மை 58% ஆகும். இலகுத்தன்மை மிகக் குறைவான பகுதி (iv) ஆவதோடு அதன் இலகுத்தன்மை 37% ஆகும்.

இலங்கை வரலாறு தொடர்பான வினாக்களில் இந்த வினாவை 45% த்தினரே தெரிவு செய்துள்ளனர். பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தின் இறுதிப் பகுதியில் நிலவிய சமூகப் பொருளாதாரப் பின்னணியில் இந்த வினா கேட்கப்பட்டுள்ளது. இவ்வினாவின் ஒவ்வொரு பகுதியினதும், உப பகுதியினதும் அடைவு மட்டம் 37% -58% வரை நடுத்தர மட்டத்தில் பரவிக் காணப்படுகிறது. கொடுக்கப்பட்டுள்ள விடைகளில் இருந்து வினாவுக்குரிய சரியான விடையைத் தெரிவு செய்தல் பிரித்தானியரது ஆட்சிக்காலத்தில் இருந்த முக்கியமானவர்கள் பற்றியும், தேசிய வீரர்கள், அவர்களது பணி போன்றன பற்றிய விடயங்களையும் முன்வைக்க இதன் மூலம் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. சுதந்திரத்தின் பின் இன்றுவரை இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பற்றிப் பகுதி (iv) கேட்கப்பட்டுள்ளது.

சுதந்திர சதுக்கத்தை அண்மித்த அரும்பொருளகம், ஏனைய அரும்பொருளகங்கள் என்பவற்றைப் பார்வையிட மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கலாம். முக்கியமான நபர்களின் புகைப்படங்கள், செய்தி அறிக்கைகள் என்பவற்றைச் சேகரித்தல். சுதந்திர தின வேலைத்திட்டம் மற்றும் தேசிய வீரர் தினத்துடன் தொடர்புடைய செய்திகள் என்பவற்றை சேகரித்து பாடசாலையிலுள்ள வரலாறு தொடர்பான அறையில் காட்சிப்படுத்துதல் போன்றவற்றில் மாணவர்களை ஈடுபடுத்தலாம். நாளாந்தம் பார்க்கும், கேட்கும் விடயங்கள் பற்றிய தகவல்கள் தொடர்பாக மாணவர்களிடையே ஆராய்வூக்கம் ஏற்படுத்தல் அவசியமாகும். பாடநூல்களைத் தவிர மேலதிக நூல்களைப் பயன்படுத்த மாணவர்களை ஈடுபடுத்துவதனூடாக அறிவுப் பரப்பினை விரிவாக்கும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்தலாம்.

## பகுதி III

### வினா 07

**நோக்கம் :** புராதன இந்தியாவின் அரசியல், சமூக, கலாசார, விருத்திக்கு ஆதாரமான ஆட்சியாளர்கள், அவர்களின் பணிகள் என்பவை பற்றிய அறிவும் விளக்கமும் பற்றி ஆராய்தல்




**7.** (i) இங்கு தரப்பட்டுள்ள படத்தில்
*A* யினால் காட்டப்படும் மலைச்சாரலின் பெயரையும்
*B* யினால் காட்டப்படும் துறைமுகத்தின் பெயரையும்
*C* யினால் காட்டப்படும் ஆற்றின் பெயரையும் முறையே எழுதுக. (03 புள்ளிகள்)

(ii) கீழே *P, Q, R, S* ஆகியவற்றினால் காட்டப்படும் விடயங்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய விடையை அடைப்புக்குறிகளினுள்ளே இருந்து தெரிந்தெடுத்து முறையே எழுதுக.
*P.* வடமேற்கு இந்தியாவில் படையெடுத்த முதல் கிரேக்கப் பேரரசர்
*Q.* ஆரியர் இந்தியாவிற்கு வந்தபோது அங்கு இருந்த பண்டைய நாகரிகம்
*R.* அசோகச் சக்கரவர்த்தி போர் புரிந்து கைப்பற்றிய இறுதி இந்தியப் பிரதேசம்
*S.* சமுத்திரகுப்த மன்னனின் பேரரசின் வியாபகம் பற்றிய தகவல்கள் இடம்பெறும் பிரதான மூலம்
(அலகபாத் பிரசத்தி, ரகுவம்சம், செலியூக்கஸ் நிகேற்றர், வங்கதேசம், கலிங்கதேசம், மகா அலெக்சாண்டர், இந்து நதி, சுமேரியா) (04 புள்ளிகள்)

(iii) மகதக் குடியிருப்பை (இராச்சியம்) பேரரசாக மாற்றுவதற்குப் பிம்பிசார மன்னன் பின்பற்றிய நடவடிக்கைகளை **இரு** விடயங்களைக் கொண்டு விவரிக்க. (05 புள்ளிகள்)

(iv) அசோகச் சக்கரவர்த்தியின் சமயச் சேவையை **மூன்று** விடயங்களைக் கொண்டு விவரிக்க. (06 புள்ளிகள்)

### எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்

7. (i)
*A* - இமய மலைச்சாரல் / இமயமலை
*B* - தாமுரலிப்தி துறைமுகம் / தாமுர லிப்தி
*C* - கிருஷ்ணா நதி / கிருஷ்ணா / கிருஷ்ணா, துங்கபத்திர **(1 x 3 = 03 புள்ளிகள்)**

(ii)
*P* - மகா அலெக்சாந்தர்
*Q* - இந்துநதி
*R* - கலிங்கம் / கலிங்க தேசம்
*S* - அகலபாத் பிரசஸ்தி **(1 x 4 = 04 புள்ளிகள்)**

(iii)
- ★ திருமணத் தொடர்பு மூலம் - காசி இராச்சியத்தை பெறல்
- ★ யுத்த மூலம் (ஆக்கிரமிப்பு) - அங்க தேசத்தை பெறல்
- ★ சமய நடவடிக்கை மூலம் (சமய சகிப்புத்தன்மை)
- ★ நட்புறவு மூலம் - கந்தாரமும் அவந்தியும்

**காரணத்துக்கு - 02 புள்ளிகள்**
**விளக்கத்துக்கு - 03 புள்ளிகள்**
**மொத்தப் புள்ளி - 05 புள்ளிகள்**

(iv) ★ 3வது பௌத்த பேரவையை கூட்டியமை
★ பௌத்த தூதுக் குழுக்களை அனுப்பியமை
★ தர்மதூது சேவை
★ பல விகாரைகளைக் கட்டியமை
★ பிற மத அனுசரணை போக்கு
★ தன் பிள்ளைகளை பௌத்தமதப் பணியில் ஈடுபடுத்தியமை

**காரணத்துக்கு - 03 புள்ளிகள்**
**விளக்கத்துக்கு - 03 புள்ளிகள்**
**மொத்தப் புள்ளி - 06 புள்ளிகள்**

**7 ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்ட விதம் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும் :**




வினா இலக்கம் 7 இனை ஏறத்தாழ 77% மானோர் தெரிவு செய்துள்ளனர். இவ்வினாவுக்குரிய புள்ளிகள் 18 ஆகும்.

0 - 4 புள்ளி ஆயிடையில் 33%
5 - 9 புள்ளி ஆயிடையில் 31%
10 - 13 புள்ளி ஆயிடையில் 21%
14 - 18 புள்ளி ஆயிடையில் 15%

ஆனவர்கள் புள்ளி பெற்றுள்ளனர்.

இவ்வினாவுக்கு 14 இற்கு மேல் புள்ளிகளைப் பெற்றோர் ஏறத்தாழ 15% மானோராவர். ஏறத்தாழ 33% மானோர் 4 இலும் குறைந்த புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இவ்வினா 9 உப பகுதிகளைக் கொண்டது. இலகுத்தன்மை மிக உயர்வான உப பகுதி (ii) $R$ ஆவதோடு அதன் இலகுத்தன்மை 84% ஆகும். இலகுத்தன்மை மிகக் குறைவான உப பகுதி (i) $B$ ஆவதோடு அதன் இலகுத்தன்மை 22% ஆகும்.

உலக வரலாறு தொடர்பான வினாக்களில் அதிகமானோர் இந்த வினாவைத் தெரிவு செய்திருந்தனர். 77% ஆனோரால் தெரிவு செய்யப்பட்டிருந்த இந்த வினா பண்டைய இந்திய நிருவாகம் பற்றியதாகும். பகுதி (i) இல் இந்தியப் படத்தில் இமய மலையை 66%ஆனோர் சரியாக அடையாளம் கண்ட போதிலும் துறைமுகங்கள், ஆறுகள் என்பனவற்றை 22%, 25% ஆனோரே சரியாக அடையாளம் கண்டுள்ளனர். (ii) இன் உப பிரிவுகளின் இலகு தன்மை 63% த்திலிருந்து 84%வரை உயர்ந்துள்ளது. இதில் அடைப்புக்குறிக்குள் இருந்து விடைகளைத் தெரிவு செய்வதில் பரீட்சார்த்திகள் தமது திறமையை வெளிப்படுத்தியுள்ளனர். (iii), (iv) இன் கீழ் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குச் சுருக்கமாக முறையே 42%, 50% என்ற ரீதியில் இலகுத்தன்மை வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

புவியியல் அம்சங்கள், வரலாற்று நிகழ்வுகள் தொடர்பான இடங்களைத் தேசப்படங்களில் குறித்துப் பெயரிடலிலும் வாழ்க்கை வரலாற்றைக் குறிப்பிடும்போது அதில் செல்வாக்குச் செலுத்திய விடயங்களில் பயிற்சி அளிப்பதிலும் ஆசிரியரின் உதவி வழங்கப்படுதல் வேண்டும். உரிய கருப்பொருள்களுக்குப் பொருத்தமான அறிக்கை, திரைப்படங்கள், வீடியோ நாடாக்கள் வேலைத்திட்டங்கள் என்பவற்றை ஆசிரியர் வழிகாட்டலுடன் பார்ப்பதற்கான சந்தர்ப்பங்களை வழங்குவதினூடாக மாணவர்களை மென்மேலும் ஆர்வமூட்டலாம்.

## வினா 08

**நோக்கம்:** "இந்தியாவின் வரலாறு, கலாசாரம் என்பன மாற்றங்களுக்குட்படுவதில் முஸ்லிம் அதிகாரப் பரம்பல் முக்கிய காரணியாக அமைந்த விதம் பற்றி ஒப்பீட்டு ரீதியிலான விளக்கத்தைப் பரிசீலித்தல்.

**8.** *"முஸ்லிம் அதிகார வியாபகம் இந்திய வரலாற்றின் ஒரு முக்கிய திருப்பு முனையாக இருக்கும் அதே வேளை அதற்கு எதிராக அரசியல் இயக்கங்களும் இந்தியாவில் உருவாகின."*

(i) முகம்மது நபியின் இறப்பின் பின்னர் முஸ்லிம் அதிகாரம் பரவிய **மூன்று** ஐரோப்பிய நாடுகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) கீழே *A, B, C, D* ஆகியவற்றின் கீழ்க் கேட்கப்பட்ட தகவல்களுக்குரிய விடையை அடைப்புக்குறிகளினுள்ளே தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிந்தெடுத்து முறையே எழுதுக.

*A.* கி.பி. 8 ஆம் நூற்றாண்டிலே முதன்முதலாக முஸ்லிம்கள் படையெடுத்த இந்தியப் பிரதேசம்

*B.* கஸ்னி முகம்மது இந்தியாவில் படையெடுத்தன் பிரதான நோக்கம்

*C.* டில்லி அடிமை இராசவம்சத்தின் தொடக்க ஆட்சியாளர்

*D.* இந்தியாவின் முஸ்லிம் ஆட்சியாளர்கள் இஸ்லாம் அல்லாத ஏனைய சமயத்தவர்களிடம் அறவிட்ட வரிக்கு வழங்கிய பெயர்

(முல்தான், பஞ்சாப், செல்வத்தைக் கொள்ளையடித்தல், அதிகாரத்தை வியாபித்தல், குத்துப் - உத்தீன் - ஐபெக், குர் முகம்மது, ஜெசியா, கராஜ்) (04 புள்ளிகள்)

(iii) முகலாயப் பேரரசில் சொந்த அதிகாரத்தை உறுதிப்படுத்துவதற்கு மகா அக்பர் அரசர் பின்பற்றிய **இரு** நடவடிக்கைகளைச் சுருக்கமாக விவரிக்க. (05 புள்ளிகள்)

(iv) இந்தியாவில் பலம் வாய்ந்தாக இருந்த விஜயநகர் இந்துப் பேரரசு பற்றிப் பின்வரும் தலைப்புகளின் கீழ்ச் சுருக்கமாக விவரிக்க.

*(a)* அமைவு

*(b)* முக்கிய ஆட்சியாளர்கள்

*(c)* ஆற்றிய சேவை

(06 புள்ளிகள்)

## எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்

8. (i) ஸ்பெயின், பிரான்ஸ், துருக்கி **(01 x 03 = 03 புள்ளிகள்)**

(ii)
*A* - முல்தான்
*B* - செல்வத்தைக் கொள்ளையடித்தல்
*C* - குத்துப் - உத்தீன் - ஐபெக்
*D* - ஜெசியா **(01 x 04 = 04 புள்ளிகள்)**

(iii)
- ★ மதச் சமரசப் போக்கு
- ★ ஜெசீயா வரிமுறையை நீக்கியமை
- ★ நிர்வாகத்தை ஒழுங்குபடுத்தல்
- ★ அரசர்கள் பின்பற்ற வேண்டிய கொள்கைகள்

**காரணத்துக்கு - 02 புள்ளிகள்**
**விளக்கத்துக்கு - 03 புள்ளிகள்**
**மொத்தப் புள்ளி - 05 புள்ளிகள்**

(iv) *(a)* **அமைவு**

- ★ கிருஷ்ணா, துங்க பத்திரா நதியின் தென்பகுதியிலுள்ள விசால நிலப்பரப்பு விஜய நகரம் - தலைநகர்

*(b)* **ஆட்சியாளர்கள்**

- ★ ஹரிகரன், புக்கன் ஆரம்ப ஆட்சியாளர்
- ★ கிருஷ்ணராய தேவர் - பலம்பொருந்திய ஆட்சியாளர் (கிருஷ்ண தேவராயர்)

$(c)$ **சேவை**

- ★ முஸ்லீம் ஆதிக்கம் தென்னிந்தியாவில் பரவாது தடுத்தமை
- ★ இந்து கலாச்சாரத்தைப் பேணியமை
- ★ தெலுங்கு இலக்கியம் வளர உதவியது
- ★ விஜய நகர கட்டிடக் கலை வளர உதவியது. **(02 x 03 = 06 புள்ளிகள்)**

**8 ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்ட விதம் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும் :**




வினா இலக்கம் 8 இனை ஏறத்தாழ 42% மானோர் தெரிவு செய்துள்ளனர். இவ்வினாவுக்குரிய புள்ளிகள் 18 ஆகும்.

0 - 4 புள்ளி ஆயிடையில் 66%
5 - 9 புள்ளி ஆயிடையில் 21%
10 - 13 புள்ளி ஆசயிடையில் 8%
14 - 18 புள்ளி ஆயிடையில் 4%

ஆனவர்கள் புள்ளி பெற்றுள்ளனர்.

இவ்வினாவுக்கு 14 இற்கு மேல் புள்ளிகளைப் பெற்றோர் ஏறத்தாழ 4% மானோராவர். ஏறத்தாழ 67% மானோர் 4 இலும் குறைந்த புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இவ்வினா 9 உப பகுதிகளைக் கொண்டது. இலகுத்தன்மை மிக உயர்வான உப பகுதி (ii) $D$ ஆவதோடு அதன் இலகுத்தன்மை 61% ஆகும். இலகுத்தன்மை மிகக் குறைவான உப பகுதி (i) ஆவதோடு அதன் இலகுத்தன்மை 13% ஆகும்.

இந்தியாவில் முஸ்லிம்கள் ஆதிக்கப் பரம்பல் தொடர்பான இவ்வினாவை 42% மானோர் தெரிவு செய்திருந்தனர். அதன் (ii) இன் உப பிரிவுகள் முறையே 34%, 48%, 54%, 61% போன்ற அளவு இலகுத்தன்மை காணப்படினும் (i), (iii), (iv)என்பவற்றிற்கான இலகுத்தன்மை மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. (ii) இல் உப பிரிவிற்கு சில விடயங்களை நினைவில் வைத்து விடை அளித்துள்ளதால் ஓரளவு அடைவுத்தன்மை காணப்படுகினறது. (i) முஸ்லிம் ஆட்சி பரவிய நாடுகள் பற்றி அறிந்திராமை (iii) கேட்கப்பட்ட முக்கிய வாழ்க்கை வரலாறு தொடர்பான முக்கிய விடயங்களை விளக்கத் தவறியமை ஆகிய காரணங்களால் இலகுதன்மை கீழ் நிலையில் உள்ளது. (iv) உபபிரிவில் தரப்பட்டுள்ள தலைப்பின் கீழ் வரலாற்று நிகழ்வு பற்றி சுருக்கக் குறிப்பு எழுதுதல் பாட விடயங்களை நுண்ணாய்வு செய்து முன்வைத்தல் என்பவற்றின் இயலுமை குறைபாடுகள் காரணமாகவே கீழ்மட்ட அடைவு அடையப்பட்டுள்ளது.

முழுமையாகப் பாட விடயங்கள் பற்றிக் கலந்துரையாடலில் ஈடுபடுத்தல் முக்கிய விடயங்களைச் சுருக்கமாகக் குறிப்பிடுவதில் பயிற்சி வழங்குதல், காலவரன் முறைக்கேற்ப இராச்சியங்கள் அரசர்கள் அவர்கள் பின்பற்றிய செயற்பாடுகள் வழிமுறைகள் என்பவற்றை பட்டியற்படுத்துதல், அட்டவணைப்படுத்துதல் காட்சிப்படுத்துதல் என்பன வரலாற்று விடயங்களை எளிதாக நினைவில் வைத்திருக்க மாணவர்களுக்கு உதவி வழங்குவனவாகும். மேலும் விளக்கமாக விடயங்களைப் பகுப்பாய்வு செய்து முன்வைத்தல் கோவைப்படுத்தல் என்பவற்றாலும் மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டலாம்.

**வினா 09**

**நோக்கம்:** "ஜப்பானின் சமகால அரசியல், பொருளாதார நடவடிக்கைகளில் செல்வாக்குச் செலுத்திய வரலாற்றுப் பின்னணி பற்றி ஒப்பீட்டு ரீதியான விளக்கத்தைப் பரிசீலித்தல்."

**9.** "*பல்வேறு தடைகளை வென்று யப்பான் தற்போது உயர் மட்ட மேம்பாட்டை அடைந்துள்ளது.*"

(i) *கீழே A, B, C ஆகியவற்றினால் காட்டப்படும் விடயங்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய விடையை அடைப்புக் குறிகளினுள்ளே இருந்து தெரிந்தெடுத்து முறையே எழுதுக.*

*A.* *யப்பானை இணைப்பதற்கும் அங்கு சமாதானத்தையும் உறுதிப்பாட்டையும் ஏற்படுத்துவதற்கும் அத்திவாரமிட்டவர்.*

*B.* *யப்பானின் மானிய முறைக் காலத்தில் சமூகத்தின் தாழ்மட்டத்திலிருந்து ரொக்குகாவா ஷோகுனேற் ஆட்சியின் கீழ் ஆட்சியாளர்களாகிய அமைந்த குழு*

*C.* *தற்கால யப்பான் பாராளுமன்றத்திற்கு வழங்கும் பெயர்*

(*நெபுனகா, யுவாங் - ஷி- காயி, சமுராயிகள், டைமியோர்கள், நெசற், டயற்*) (03 *புள்ளிகள்*)

(ii) *ரொக்குகாவா ஷோகுனேற்றுகளின் கீழ் யப்பானில் விவசாயம் தொடர்பாக ஏற்பட்ட* **இரு** *மாற்றங்களைக் குறிப்பிடுக.* (04 *புள்ளிகள்*)

(iii) *மெயிஜி ஆட்சிக் காலத்தில் யப்பான் ஒரு புதிய பொருளாதாரக் கோலத்திற்கு வழிப்படுத்தப்பட்ட விதத்தை* **இரு** *விடயங்களின் கீழ் விவரிக்க.* (05 *புள்ளிகள்*)

(iv) *யப்பான் ஆசிய நாடுகளில் அதன் அதிகாரத்தைப் பரவச் செய்த விதத்தை உதாரணங்கள் தந்து விளக்குக.* (06 *புள்ளிகள்*)

## எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்

9. (i)
*A* - நெபுனகா
*B* - டைமியோர்கள்
*C* - டயற் **(1 x 3 = 03 புள்ளிகள்)**

(ii)
- வேளாண்மை விருத்தி
- புதிய விதை இனங்கள் அறிமுகம்
- விவசாயத்தின் பொருட்டு நவீன உபகரணங்களை உபயோகப்படுத்தியமை
- விவசாயிகளை உரம் உபயோக்கத் தூண்டுதல்
- விவசாயக் கைத்தொழிலுக்குத் தேவையானவற்றைப் பயிரிடல் (மல்பெரி, பருத்தி, கரும்பு, புகையிலை) **(1 x 4 = 04 புள்ளிகள்)**

(iii)
★ திறந்த பொருளாதாரக் கொள்கை
★ வர்த்தக பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதல்
★ பொருளாதார அபிவிருத்திக்கு வேண்டிய அடிப்படை வசதிகள் (கப்பல் கட்டல், புகையிரதம், மின்சாரம்)
★ பாரக் கைத்தொழிலுக்குரிய உதவிகள் வழங்கப்பட்டது. (மிற்சுயி, மிசிசிப்பி)

**காரணத்துக்கு - 02 புள்ளிகள்**
**விளக்கத்துக்கு - 03 புள்ளிகள்**
**மொத்தப் புள்ளி - 05 புள்ளிகள்**

(iv)
★ ஆசியாவில் ஜப்பான் அதிகாரத்தை பரப்புவதற்காக
  ★ சந்தைகளைப் பெறுதலும்
  ★ பாதுகாப்பினை உறுதிப்படுத்தலும்
  ★ தொடர்பாடலை ஏற்படுத்தலுக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது.
  ★ அயல் நாடுகளான சீன, ரஷ்யா உடனான யுத்தம்

★ 1ஆம் உலகமகாயுத்த செயற்பாடு
★ 2ஆம் உலகமாகயுத்த செயற்பாடு
(சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளை கைப்பற்றல்)

**காரணத்துக்கு - 02 புள்ளிகள்**
**விளக்கத்துக்கு - 03 புள்ளிகள்**
**மொத்தப் புள்ளி - 05 புள்ளிகள்**

**9 ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்ட விதம் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் :**




வினா இலக்கம் 9 இனை ஏறத்தாழ 31% மானோர் தெரிவு செய்துள்ளனர். இவ்வினாவுக்குரிய புள்ளிகள் 18 ஆகும்.

0 - 4 புள்ளி ஆயிடையில் 64%
5 - 9 புள்ளி ஆயிடையில் 25%
10 - 13 புள்ளி ஆயிடையில் 7%
14 - 18 புள்ளி ஆயிடையில் 4%
ஆனவர்கள் புள்ளி பெற்றுள்ளனர்.

இவ்வினாவுக்கு 14 இற்கு மேல் புள்ளிகளைப் பெற்றோர் ஏறத்தாழ 4% மானோராவர். ஏறத்தாழ 64% மானோர் 4 இலும் குறைந்த புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இவ்வினா 6 உப பகுதிகளைக் கொண்டது. இலகுத்தன்மை மிக உயர்வான உப பகுதி (i) C ஆவதோடு அதன் இலகுத்தன்மை 62% ஆகும். இலகுத்தன்மை மிகக் குறைவான உப பகுதி (iv) ஆவதோடு அதன் இலகுத்தன்மை 15% ஆகும்.

யப்பானின் அபிவிருத்தியில் வரலாற்றின் தாக்கம் தொடர்பாகக் கேட்கப்பட்டுள்ள அவ்வினாவை 31% ஆனோர் தெரிவு செய்துள்ளனர். கொடுக்கப்பட்டுள்ள விடைகளிலிருந்து சரியான விடைகளைத் தெரிவு செய்யும். (i) பகுதிக்கு முறையே 55%, 40%, 62% என்ற ரீதியில் இலகுதன்மை காணப்படுகிறது. (ii), (iii)), (iv) ஆகிய பகுதிகளுக்கு 33%, 23%, 15% என்ற நிலையில் உள்ளது. விவசாய மாற்றம், புதிய பொருளாதார கோலங்களில் ஈடுபடுதல் ஆசியாவில் ஆதிக்கம் பரம்பல் பற்றிய உதாரணங்களை விளக்குதல் அவ்வக் காலத்துக்குரிய தகவல்களை நினைவில் வைத்திருப்பதில் உள்ள இயலுமை குறைபாடு என்பனவே இதற்குக் காரணங்களாகும். மேலும் விடயங்களைக் குறிப்பிட்டு விளக்குதலில் இடர்ப்பாட்டையும் காணக்கூடியதாக உள்ளது.

ஒவ்வொரு நாட்டிலும் குறிப்பிட்ட காலப்பகுதியில் இருந்த ஆட்சியாளர், நிகழ்ந்த ஆட்சிமுறை, இடம்பெற்ற முக்கிய மாற்றங்கள் முக்கிய விடயங்களை ஒழுங்குபடுத்துதல் போன்ற செயற்பாடுகளில் மாணவர்களை பெருமளவு ஈடுபடுத்தல் அவசியமாகும். மேற்குறிப்பிட்ட வரலாற்று தகவல்களிலிருந்து பெறக்கூடிய முன்மாதிரிகள் உதாரணங்கள் என்பவற்றைக் கலந்துரையாடுவதினூடாக மாணவர்களிடமுள்ள குறைபாடுகளை இழிவளவாக்க முடியும். மேலும் குடித்தொகைக்கு உரிய வரலாற்று விடயங்கள் பற்றி மேலதிக கவனம் செலுத்துதலும் அவசியமாகும்.

**வினா 10**

**நோக்கம்:** உலகத்தினுடைய அரசியல் போக்கையும் உலக சமாதானத்தைப் பேணுவதற்குமான பிரயத்தனங்களையும் விளக்குவர்."

**10.** "உலகப் போர் காரணமாக உலகில் அரசியலில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன."

(i) முதலாம் உலகப் போருடன் தொடர்புபட்ட

*A.* நட்பாளர் தரப்பைச் சேர்ந்த **இரு** நாடுகளையும்

*B.* நடுநிலையான வல்லரசுகளின் தரப்பைச் சேர்ந்த ஒரு நாட்டையும்

முறையே குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) கீழே *A, B, C, D* ஆகியவற்றில் காணப்படும் விடயங்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய விடையை முறையே காட்டுக.

*A.* பிரான்சிற்கும் ஜெர்மனிக்குமிடையே உள்ள போர் நிலைமைக்கு வழிவகுத்த தாதுகளும் நிலக்கரியும் மிக்க பிரதேசம்

*B.* ஹிட்லரின் இரகசியப் பொலீசுக்கு வழங்கிய பெயர்

*C.* இரண்டாம் உலகப் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்காகக் கீழ்ப்படுவதற்கான உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட யப்பான் பேரரசர்

*D.* இரண்டாம் உலகப் போர் காரணமாகப் பொருளாதாரச் சீரழிவுக்கு உட்பட்ட ஐரோப்பிய நாடுகளுக்கு உதவியளிப்பதற்கு அமெரிக்காவின் தலைமையில் செயற்பட்ட நிகழ்ச்சித்திட்டம் (04 புள்ளிகள்)

(iii) உலகச் சமாதானத்தைப் பாதுகாக்கும் நோக்குடன் முதலாம் உலகப் போருக்குப் பின்னர் அமைக்கப்பட்ட சர்வதேசச் சங்கம் வெற்றியீட்டாமைக்கு வழிவகுத்த **இரு** காரணங்களைச் சுருக்கமாக விவரிக்க. (05 புள்ளிகள்)

(iv) ஐக்கிய நாடுகளின் சபை உலக முரண்பாடுகளைத் தீர்க்கப் பின்பற்றத்தக்க **மூன்று** நடவடிக்கைகளை விளக்குக. (06 புள்ளிகள்)

## எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்

10. i. *A* நட்பு நாடுகள்

பெரிய பிரித்தானியா, பிரான்ஸ், ரஷ்யா, ஐக்கிய அமெரிக்கா **(1 x 2 = 02 புள்ளிகள்)**

*B* நடுநிலை வல்லரசு நாடுகள்

ஜேர்மனி, ஆஸ்திரியா, துருக்கி, இத்தாலி, பல்கேரியா, ஹங்கேரி

**(1 x 1 = 01 புள்ளிகள்)**

**(மொத்தம் 03 புள்ளிகள்)**

ii. *A* - அல்சாஸ் லொறேன்

*B* - ஹெஸ்ட்போ

*C* - ஹிரோஹித்தோ

*D* - மார்ஷல் திட்டம் **(1 x 4 = 04 புள்ளிகள்)**

iii.
- ★ ஐக்கிய அமெரிக்கா அங்கத்துவம் பெறாமை
- ★ ஜேர்மனிக்கும் ரஷ்யாவிற்கும் அங்கத்துவம் வழங்கப்படாமை
- ★ அங்கத்துவ நாடுகளிடையே ஒற்றுமையின்மை
- ★ தீர்மானம் எடுக்கும்போது ஒற்றுமை காணப்படாமை
- ★ நாடுகளின் ஆக்கிரமிப்பின் போது தடுக்கக் கூடிய தனியான படையொன்று இல்லாமை

**காரணத்துக்கு - 02 புள்ளிகள்**

**விளக்கத்துக்கு - 03 புள்ளிகள்**

**மொத்தப் புள்ளி - 05 புள்ளிகள்**

iv. நாடுகளுக்கிடையிலான முரண்பாடுகளைத் தீர்ப்பதில் நடுவராக செயற்படல் (செயலாளர் பாதுகாப்புச் சபை ஊடாக செயற்படல்)

- ★ சர்வதேச நீதிமன்றத்தினூடாக மத்தியஸ்தம் வகித்தல்
- ★ அணுவாயுத தடை ஒப்பந்தம் செய்தல்
- ★ சமாதான படைகளை அனுப்பி நடவடிக்கை எடுத்தல்
- ★ பொருளாதார தடைகளை விதித்தல்
- ★ சமாதானப் பேச்சு வார்த்தை நடாத்தல்

**காரணத்துக்கு - 02 புள்ளிகள்**
**விளக்கத்துக்கு - 03 புள்ளிகள்**
**மொத்தப் புள்ளி - 05 புள்ளிகள்**

**10 ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்ட விதம் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும் :**




வினா இலக்கம் 10 இனை ஏறத்தாழ 42% மானோர் தெரிவு செய்துள்ளனர். இவ்வினாவுக்குரிய புள்ளிகள் 1 8 ஆகும்.

0 - 4 புள்ளி ஆயிடையில் 38%
5 - 9 புள்ளி ஆயிடையில் 30%
10 - 13 புள்ளி ஆயிடையில் 18%
14 - 18 புள்ளி ஆயிடையில் 14%
ஆனவர்கள் புள்ளி பெற்றுள்ளனர்.

இவ்வினாவுக்கு 14 இற்கு மேல் புள்ளிகளைப் பெற்றோர் ஏறத்தாழ 14% மானோராவர். ஏறத்தாழ 38% மானோர் 4 இலும் குறைந்த புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இவ்வினா 8 உப பகுதிகளைக் கொண்டது. இலகுத்தன்மை மிக உயர்வான உப பகுதி (i) A ஆவதோடு அதன் இலகுத்தன்மை 78% ஆகும். இலகுத்தன்மை மிகக் குறைவான உப பகுதி (ii) *B* ஆவதோடு அதன் இலகுத்தன்மை 22% ஆகும்.

உலக யுத்தம் தொடர்பாகக் கேட்கப்பட்ட இவ்வினாவிற்கு 42% த்தினர் விடையளித்திருந்தனர். இதில் (i) *A*, *B*, (ii) *A* உப பிரிவுகளுக்கு 78%, 72%, 67% என்ற உயர் இலகுதன்மை பெறப்பட்டுள்ளது. எனினும் பிரிவு (ii) இல் *B*, *C*, *D* என்பனவற்றின் இலகுதன்மை 22%, 28%, 40% எனக் குறைந்துள்ளது. (iii), (iv) பிரிவுகள் தொடர்பாகக் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு முறையே 42%, 39%அடைவு மட்டமே பெறப்பட்டுள்ளது.

தகவல்களை நினைவில் வைத்திருக்கவும். பிரதிபலிப்புக்கான முறையியலை அறிமுகப்படுத்தவும் வரலாற்றுப்பாட விடயங்களிடையே உள்ள தொடர்புகளை தெளிவாக விளங்கிக் கொள்ளல் அவசியமாகும். சமகால செய்திகள், நிகழ்வுகள், சர்வதேச தகவல்களைச் சேகரித்தலில் பழக்கம் ஏற்படுத்துதல், மதிப்பீட்டுக்கு உட்படுத்துதல் நிகழ்வுகளில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் எனப் பல்வேறு விடயங்கள் பற்றியும் விவரிப்பதற்கான ஆற்றலை மேம்படுத்துதல், திறந்த நூல் பரீட்சையை ஊக்குவித்தல், தேசப்படங்களை துணையாகக் கொண்டு பாடவிடயங்களை உறுதியாக்குதல், அவற்றைக் காட்சிப்படுத்துதல் என்பவற்றினூடாக உயர்மட்ட அடைவை மாணவர் பெறும் சந்தர்ப்பத்தை உருவாக்கலாம்.

2.2.3 **II ஆம் வினாப்பத்திரத்திற்கு அளிக்கப்பட்ட விடைகள் தொடர்பான அவதானிப்புகளும், முடிவுகளும், ஆலோசனைகளும்**




**பகுதி I**

இந்தப் பகுதியிலுள்ள வினா கட்டாயமானது. இதில் (அ) பகுதியில் (i) இன் கீழ் இலங்கை வரலாற்றுடன் தொடர்புடைய 10 இடங்களும் (ii) இன் கீழ் உலக வரலாற்றுடன் (ஐரோப்பா - ஆசியா) தொடர்புடைய 8 இடங்களும் கொடுக்கப்பட்ட புறவுருப் படத்தில் குறிப்பது எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கான புள்ளிகள் முறையே 10, 8 (18 புள்ளிகள்) ஆகும். எனினும் மாணவரின் அடைவு மட்டம் திருப்தியாக இல்லை. (ஆ) பகுதியின் (i), (ii), (iii)உப பிரிவுகளுக்கு முறையே 4 புள்ளிகள் என்ற ரீதியில் 12 புள்ளிகளாகும். வினாக்களில் 6 வினாக்கள் இலங்கை வரலாறு தொடர்பாகவும், 6 வினாக்கள் உலக வரலாறு தொடர்பாகவும் கேட்கப்பட்டுள்ளன. பொதுவாக நோக்குமிடத்து, (ஆ) பகுதிக்கு விடையளிக்கப்பட்ட விதம் திருப்தியாக இருக்கின்ற போதிலும் (அ) பிரிவின் (i), (ii)என்பவற்றில் இடங்கள் குறிக்கப்பட்டு பெயரிடப்பட்ட விதம் திருப்தியாக இல்லை.

எனவே இத்திறனை விருத்தி செய்யும் பொருட்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்,

- ⋆ சரியான நுட்பமுறையைப் பயன்படுத்தி தேசப்படங்களில் குறித்துப் பெயரிடுவதற்குப் பயிற்சி அளித்தல்
- ⋆ வரலாற்றுடன் தொடர்புடைய விடயங்கள், இடங்கள் தொடர்பாகக் கலந்துரையாடல்
- ⋆ இலங்கை, ஐரோப்பா, ஆசியா ஆகியவற்றின் அமைவிடம் தொடர்பான விளக்கத்தை மாணவர்களுக்கு அளித்தல் (ஆறுகள், மலைத் தொடர், சமவெளி, கணவாய், துறைமுகங்கள்)
  கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளுக்கு இவை உதவியாக அமையும்.

## பகுதி II

இப்பகுதியில் இலங்கை வரலாற்றுடன் தொடர்புடைய தலைப்புக்களில் இருந்து 5 வினாக்கள் கேட்கப்பட்டதுடன் பரீட்சார்த்திகள் அவற்றில் மூன்றினைத் தெரிவு செய்தல் வேண்டும். 4 ஆம் வினாவை 53% ஆனோரும், 6ஆம் வினாவை 45% ஆனோரும் தெரிவு செய்திருந்தனர். 2,3,5 ஆகிய வினாக்களை ஏறக்குறைய 70% ஆனோர் தெரிவு செய்திருந்தனர்.

இலங்கை வரலாற்றில் மத்திய காலம் தொடர்பாக அரசியல், பொருளாதார, சமூக பண்பாடு என்பன பற்றிய போதிய அறிவின்மையும் இலங்கையில் பிரித்தானியரது ஆட்சிக்காலத்தின் இறுதி அரைப்பகுதியில் ஆரம்பமான அரசியல், சமூக, பொருளாதார, பண்பாடு ஆகியவைகளின் எழுச்சி என்பன தொடர்பாகப் போதிய விளக்கமின்மையும் இதற்கான காரணங்களாகும். இந்த விடயங்கள் தொடர்பாக உள்ள கட்டுரைகள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் மேலதிக நூல்கள் என்பனவற்றிலிருந்து விடயங்களை அறிந்து கொள்வதற்கு மாணவர்களை ஊக்குவித்தல் அவசியமாகும்.

- ★ வரலாற்று நிகழ்வுகளை சரியாக இணைத்தல்
- ★ காலத்திற்குப் பொருத்தமான வரலாற்று நிகழ்வுகளை ஒழுங்குபடுத்துதல்
- ★ வரலாற்றுத் தகவல்களை நுணுக்கமாகப் பரிசீலனை செய்யும் திறமை வளரும் விதத்தில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல்
- ★ இலங்கையின் அரசியல் வரலாற்றுடன் தொடர்புடைய அரசர்களின் பெயர்கள் முக்கிய நிகழ்வுகள் ஆகியவற்றை அட்டவணைப் படுத்தல்
- ★ வரலாற்றுத் தகவல்களை கட்டியெழுப்பக் கூடிய எண்ணக்கருப் படங்களை (concept maps) உபயோகப்படுத்துவதன் மூலமும் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை மேம்படுத்தலாம்.

மேலே குறிப்பிடப்பட்ட வழிமுறைகளைப் பின்பற்றுதல் மூலம் மாணவர்களிடம் உயர் அடைவு மட்டத்தை எதிர்பார்க்கலாம்

## பகுதி III

இந்தப் பகுதி இந்தியா, சீனா, யப்பான், மத்திய கால ஐரோப்பா ஆகியவற்றின் வரலாற்றினை உள்ளடக்கியதாகும். நான்கு வினாக்களில் இரண்டு வினாக்களுக்கு விடை அளிக்க வேண்டும். இவற்றில் இந்தியா தொடர்பாகக் கேட்கப்பட்ட வினாவுக்கு ஓரளவு திருப்திகரமாக விடையளிக்கப்பட்டிருந்த போதிலும் யப்பான், சீனா மத்தியகால ஐரோப்பா என்பன தொடர்பாகக் கேட்கப்பட்ட வினாக்களுக்கு அளிக்கப்பட்ட விடைகள் திருப்திகரமாக இல்லை.

இப்பாடப் பகுதி பற்றிய மாணவர்களின் அறிவை விருத்தி செய்வதற்கு மேலதிக நூல்கள் சஞ்சிகைகள், வேறு மூலாதாரங்கள் என்பனவற்றிலிருந்து தகவல்கள் தேடியறிந்து சேகரிக்க மாணவர்களுக்கு ஊக்கமளித்தல் விரும்பத்தக்கது. அவ்வாறே தனியாள் செயற்பாடுகள் குழு செயற்பாடுகளை மேற்கொள்வதுடன், வரலாற்றுடன் தொடர்புடைய இடங்களை தேசப்படங்களில் இனங்காணப் பயிற்றுவித்தலும் பொருத்தமானதுதாகும்.

# பகுதி III

## 3.0 விடையளிக்கும்போது அவதானிக்கப்பட வேண்டிய விடயங்களும் ஆலோசனைகளும்

### 3.1. விடையளிக்கும் போது அவதானிக்கப்பட வேண்டிய விடயங்கள்

பொது அறிவுறுத்தல்கள்

✶ வினாப்பத்திரத்திலுள்ள அடிப்படை **அறிவுறுத்தல்களை** வாசித்து விளங்கிக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு பகுதியிலும் விடையளிக்கப்பட வேண்டிய வினாக்களின் எண்ணிக்கை, கட்டாய வினாக்கள் யாவை, எவ்வளவு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. புள்ளி ஒதுக்கீடு எவ்வளவு என்பவை பற்றிய விடயங்களைக் கவனத்தில் கொள்வதுடன் வினாக்களை நன்கு வாசித்துத் தெளிவான விளக்கம் பெற்ற பின்னர் விடையளிக்க வேண்டிய வினாக்களைத் தெரிவு செய்து விடையளித்தல் வேண்டும்.

✶ முதலாம் பகுதிக்கு விடையளிக்கும்போது **மிகச் சரியான** அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்தல் வேண்டும். பின்னர் **தெளிவாக ஒரு புள்ளடி** அடையாளத்தை இடுதல் வேண்டும்.

✶ இரண்டாம் வினாப்பத்திரத்திற்கு விடையளிக்கும்போது ஒவ்வொரு பிரதான வினாக்களையும் விடைத்தாளின் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் நன்று.

✶ **திருத்தமான தெளிவான** கையெழுத்தில் எழுத வேண்டும்.

✶ **சுட்டெண்களைத்** தெளிவாக ஒவ்வொரு பக்கத்திலும் உரிய இடங்களில் எழுதுதல் வேண்டும்.

✶ வினா இலக்கத்தையும் பகுதி **வினாக்களின் இலக்கங்களையும்** உப பகுதி வினாக்களின் இலக்கங்களையும் தெளிவாக திருத்தமாக எழுதுதல் வேண்டும்.

✶ சுருக்கமாக விடை எழுத வேண்டியவைக்கு நீண்ட விடைகளும், விளக்கமாக விடை எழுத வேண்டியவைக்கு சுருக்கமான விடைகளும் எழுதுவதைத் தவிர்த்தல் வேண்டும்

✶ வினாக்கள் கேட்கப்படும் விதத்துக்கேற்றவாறு தர்க்க ரீதியாகவும் பகுப்பாய்வு ரீதியாகவும் விடயங்களை முன்வைத்தல் வேண்டும்.

விசேட அறிவுறுத்தல்கள்

⋆ தேசப்படங்களில் குறித்துப் பெயரிடும்போது கவனத்தில் கொள்ள வேண்டியவை.
  - நகரங்களைக் குறிக்கும்போது மிகச் சரியாக இடத்தில் புள்ளியிட்டுப் பெயரிடுதல்
  - இராச்சியங்கள், குளங்கள் என்பவற்றை உரிய பிரதேசத்தை நிழற்றிக் காட்டுதல்.
  - ஆறுகளாயின் அவற்றை இனம்காணும் விதத்தில் பெயரிடுதல்.

⋆ கேட்கப்படும் வினாக்களுக்குப் பொருததமானவாறு விடைகளைத் தொகுத்து முன்வைத்தல்

⋆ விடயங்களைக் குறிப்பிடுதல் அவற்றை விளக்குதல், விவரித்தல், சான்றாதாரம் காட்டுதல் என்பவற்றுக்கேற்பவே வினாக்களுக்குரிய புள்ளிகள் வழங்கப்படுகின்றன என்பதை விளங்கிக் கொள்ளுதல்

⋆ கட்டமைப்பு வகை வினாக்கள், கட்டுரை வினாக்கள் என்பவற்றில் உதாரணங்களை முன்வைத்தல் வேண்டும்.

⋆ உப தலைப்புகளுக்கான விடைகளைப் பந்தி பந்தியாக வேறுபடுத்தி எழுதுதல்

### 3.2. கற்றல் கற்பித்தல் செயன்முறை பற்றிய கருத்துக்களும் ஆலோசனைகளும்

★ **கற்றல் - கற்பித்தல் மதிப்பீட்டு செயன்முறை என்பன மூலம் பெறுபேற்றில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் பொருட்டு மேற்கொள்ள வேண்டியவை**

- கற்பித்தல் உபகரணங்களைப் பயன்படுத்தல்
- பாட செயற்பாடுகளை ஆர்வமூட்டும் வகையில் ஒழுங்கு செய்தல்
- களப்பயணங்களை மேற்கொள்ளும் போது பல்வேறு பாட விடய கருப்பொருள்களை உள்ளடக்கும் விதத்தில் நடவடிக்கை மேற்கொள்ளல் (பாடப் பரப்புடன் தொடர்புடைய)
- குறிப்பாக பாடநூல்களைக் கற்பதற்கு ஊக்கமளித்தல்
- மாணவரின் ஆக்கங்களை (பாடத்துடன் தொடர்புடைய) வகுப்பில் காட்சிப்படுத்தல்
- சுவர்ப் பத்திரிகை, சஞ்சிகைகள் ஆகியவற்றை நிர்மாணிக்க மாணவர்களுக்குத் தேவையான வசதிகளை வழங்குதல்
- வரலாறு பாடத்துக்கென அறை அல்லது ஒரு பகுதியை ஒதுக்கி அபிவிருத்தி செய்தல்